# இலங்கை அரசுப் பல்கலைக்கழக முறைமை முகங்கொடுத்துள்ள சிக்கல்களும் சவால்களும்



பேராசிரியர் ஜே.ஈ.ஜயசூரிய நினைவுப் பேருரை 2013



தகைசார் பேராசிரியர்
டப்லியு.டீ.இலக்ஷ்மன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசுப் பல்கலைக்கழக முறைமை முகங்கொடுத்துள்ள சிக்கல்களும் சவால்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசுப் பல்கலைக்கழக முறைமை முகங்கொடுத்துள்ள சிக்கல்களும் சவால்களும்

முதலாம் பதிப்பு : 2013 ஏப்ரல்

பேராசிரியர் ஜே. ஈ. ஜயசூரிய நினைவுப் பேருரை 2013

© பேராசிரியர் டப்லியு. டீ. இலக்ஷ்மன்

மொழிபெயர்ப்பு : சாமிநாதன் விமல்

கணணி எழுத்து வடிவமைப்பு : சாமிநாதன் விமல்

அட்டைப்பட வடிவமைப்பு : சஞ்ஜய ஆபா செனெவிரத்ன

அச்சகம் : 316, 2nd Lane,
U. E. Perera Mawatha,
Obesekarapura,
Rajagiriya.
Telephone : 071 8084923
071 2297858

வெளியீடு : பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம்.
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசுப் பல்கலைக்கழக முறைமை முகங்கொடுத்துள்ள சிக்கல்களும் சவால்களும்

தகைசார் பேராசிரியர்
**டப்லியு. டீ. இலக்ஷ்மன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூலானது

**Inclusive University Education and the Public University in Sri Lanka**

என்ற தலைப்பில்

தகைசார் பேராசிரியர்

**டப்லியு. டீ. இலக்ஷ்மன் அவர்கள்**

2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதியன்று

காமும்பு இலங்கை மன்றம் நிறுவனத்தில் ஆற்றிய

**பேராசிரியர் ஜே.ஈ.ஜெயசூரிய நினைவு பேருரையின்**

தமிழ் மொழிபெயர்ப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கடந்த இரண்டு வருட காலமாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தால் சமூகத்தில் பொதுவாக கல்வித்தொடர்பாகவும் குறிப்பாக பல்கலைக்கழகக் கல்வித் தொடர்பாகவும் தொடக்க முயற்சித்த உரையாடல்களின்பால் மிக முக்கியமானதொரு பங்களிப்பை வழங்குகின்றதாக பேராசிரியர் ஜே.ஈ.ஜயசூரிய நினைவுப் பேருரைத் தொடரில் இருபத்து மூன்றாவது நினைகவுப் பேருரையாக பேராசிரியர் டப்லியு.டீ.இலக்ஷ்மன் அவர்கள் ஆற்றிய பேருரை அமைந்துள்ளது. அதனை நூல் வடிவத்தில் வெளியிடுவதற்கு பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்க சம்மேளனம் முடிவு செய்தமைக்கான முக்கிய காரணம் அதுவே ஆகும்.

இந்நினைவுப் பேருரையின் போது இந்த நொடியில் இலங்கையில் அரசப் பல்கலைக்கழக முறைமைப் போலவே பொதுவான கல்வியும் முகங்கொடுத்துள்ள பல சவால்களின் மீது பேராசிரியர் இலக்ஷ்மன் கவனம் செலுத்துகிறார். குறிப்பாக தற்போதைய ஆளும் வர்க்க மேட்டுக்குடியினரால் ஒரு மந்திரம் போல ஓதப்பட்டுக்கொண்டிருக்கும் நவ தாராளமயவாதம் என்பதற்குள் கல்வியின் கதி நிலைமைத் தொடர்பான ஒரு விமர்சனம் இதில் உள்ளடக்கப்படுகின்றது. குறிப்பாக இந்ா நவ தாராளமயவாத அணுகுமுறைக்குள் சமூகம் சார்ந்தும் நாகரிகம் சார்ந்தும் கல்வியின் நோக்கங்கள் மீது மேற்கொள்ளப்படும் தீங்கான பாதிப்புகளை பற்றி அவர் கவனம் செலுத்தியுள்ளமையானது மிக முக்கியமானதொன்றாகும்.

எவ்வாறாயினும் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வியானது நெருக்கடியைச் சந்தித்துள்ளது என்ற கருத்தை ஏற்றுக்கொள்வதில் பேராசிரியர் இலக்ஷ்மன் தயக்கங்காட்டுகிறார் என்பது தெளிவாக காணக்கூடியதாக உள்ளது. "நெருக்கடி" என்ற சொல்லை நெகிழ்ச்சியாக பல சந்தர்ப்பத்தில் பயன்டுத்திக்கொண்டுள்ள சூழ்நிலையில் இந்தத் தயக்கத்தை தெளிவாகப் புரிந்துக்கொள்ள முடியும். எவ்வாறாயினும் மிகவும் தெளிவானதொரு நிலைமை காரணமாக பல்கலைக்கழகக் கல்வியில் போலவே பொதுவான கல்வியிலும் தற்போது காணப்படும் நிலைமையை தெளிவுப்டுத்துவதற்கு பல்கலைக்கழக ஆசியரியர் சங்க சம்மேளனம் "நெருக்கடி" என்ற சொல்லைப் பயன்டுத்தப்படுகிறது. தற்போதைய கல்வி சார்ந்த கொள்கை வகுப்பாளர்களும் குறிப்பிட்ட கொள்கைகளை அமுல்படுத்துபவர்களும் அத்துடன் பொது சமூகமும் கல்வியை பற்றி சிந்திக்கும் முறையிற்கும் இலங்கைக் கல்வி முறைமை அடித்தளமாகக்கொண்டுள்ள பிரமாணங்களுக்கும் இடையிலான இடைவெளி அகலமாகிக்கொண்டுள்ளமை இதற்கான பிரதான காரணமாக உள்ளது என்பது என்னுடைய கருத்தாகும்.

நபர்களுக்கு தொழில் ஒன்றுக்கான பயிற்சியை வழங்குவதே கல்வியின் முக்கிய குறிக்கோளாக கொண்டிருக்க வேண்டும் என்பதே நவ தாராளமய அணுகுமுறையால் வலியுறுத்தப்படும் கருத்தாகும். இதற்கு எதிராக நின்று நாகரிகம் சார்ந்ததும் சமூகம் சார்ந்ததுமான கல்வியின் அகன்ற குறிக்கோள்களை இணைதுள்ள கொள்கை ரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகு முறையொன்றினை முன்மொழிதல்தான் பேராசிரியர் இலக்ஷ்மன் மேற்கொள்ளும் அறிவார்ந்த முயற்சியாக உள்ளது.

அவ்வாறானதொரு மிருதுவான அணுகுமுறை வழியாக நவ தாராளமய தாக்குதல்களில் இருந்து கல்வியின் அகன்ற சமூகமய மற்றும் நாகரிகமய குறிக்கோள்களை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய சாத்தியப்பாடுகள் மிகவும் குறைவு என்பதே எமது அவதானிப்பாக உள்ளது. கல்வியின் அகன்றளவிலான சமூகமய மற்றும் நாகரிகமய குறிக்கோள்களை அலங்கார உத்திகளிலான முறைமையில் நவ தாராளமய செயல் திட்டத்துடன் இணைக்கப்பட்டதாக சமூகத்திடம் வழங்குவதற்கு ஆட்சி அதிகாரத்தைக்கொண்டுள்ள இந்த மேட்டுக் குடியினர் மிக விருப்பத்துடன் உள்ளமையே அதற்கான காரணமாகும். தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டு வருவதும் அதுவேயாகும். கல்வி தொடர்பான புதிய தாராளமயவாத அணுகுமுறையை மிகவும் தீர்க்கமானதாக வெளிக்கொணருதல் என்பது ஒரு முக்கியமான தேவையாக உள்ளமைக்கு காரணமும் இதுவேயாகும்.

பெருமெண்ணிக்கையில் இலாபம் சம்பாதித்துக்கொள்ளக்கூடிய துறைகளாக கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகள் மாறியுள்ளமை தற்போதைய ஒரு வெளிப்படையான உண்மையாகும். எனவேதான் பேராசிரியர் இலக்ஷ்மனால் மிகவும் பொருந்தும்படி "பட்டங்களை விற்பனை செய்யும் கடைகள்" என அறிமுகப்படுத்தப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்படுகின்றன.

சாதாரண உற்பத்தித் துறைகளில் இலாப சதவீதம் வேகமாக வீழ்ச்சியடைந்து கொண்டுள்ளமையானது இன்று உலகமய மட்டத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட முதலாளித்துவ முறைமை முகங்கொடுத்துள்ள ஒரு தீர்க்கமான பிரச்சினையாக குறப்பிடலாம். உழைப்பின் விலையானது ஒப்பீட்டளவில் ஏற்றமடைந்துள்ளமையே அதற்கு பிரதான காரணமாக உள்ளது. எனவே குறைந்த உழைப்பை வழங்குவதன் வழியாக அதிக இலாபத்தை சம்பாதித்துக்கொள்ளக்கூடியதான கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசியமான பொதுசன சேவைகளை விலைப்பொருட்களாக்க வேண்டிய தேவை அதிகமாகத் தோன்றியுள்ளது.

கல்வி மாத்திரமல்ல சுகாதாரம் போன்ற துறைகளையும் விலைப்பொருள்மயமாக்கப்படுதலில் இருந்து விடுவித்துக்கொண்டு பொதுசன தேவைகளாக மேற்கொண்டு செல்ல வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தல், முன்னிலைப்படுத்தல் என்பது முக்கியமானதாக உள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் மொத்த தேசிய உற்பத்தியில் இருந்து 06% வீதம் அரசு செலவீனங்களாக கல்விக்காக ஒதுக்க வேண்டும் என்ற சுலோகத்தை முன்வைக்க காரணமும் இதுவே ஆகும்.

**நிர்மால் இரஞ்சித் தேவசிறி**
தலைவர்
பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01) அறிமுகம்:

2012–02–14ஆம் திகதிக்குப் பிந்திய சிறிது காலத்தில் மீண்டும் பேராசிரியர் ஜே.ஈ.ஜயசூரிய நினைவுக்கூரல் நிகழ்ச்சியில் பேருரை ஆற்றுமாறு பேராசிரியர் ஜே.ஈ.ஜயசூரிய நினைவு அமைப்பு என்னிடம் முன்வைத்த அழைப்பை இட்டு நான் என்னுடைய மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டே ஏற்றுக்கொண்டேன். இந்நாட்டில் உருவான ஒரு உன்னதமான கல்வியாளருக்கு என்னுடைய பணிவான புகழுரையை ஆற்றுவதற்கு எனக்கு கிடைக்கப்பெற்ற ஒரு பெறுமதிமிக்க வாய்ப்பாகவும் அத்துடன் எனக்கு வழங்கப்பட்ட ஒரு கௌரவமாகவும் இந்த அழைப்பை கருதினேன். என்னுடைய இந்த கௌரவம் செலுத்தலுடன் இணையும் என்னுடைய மனைவி கல்யாணி 1960களில் பேராசிரியர் ஜயசூரியவின் தலைமைத்துவத்தின் கீழ் தொடக்கப்பட்ட கல்விமாணிப் பட்டத்திற்கான பாடநெறியைக் கற்றவர் ஆவார். கல்யாணி பேராசிரியர் ஜயசூரிய பற்றிப்பேசும் சந்தர்ப்பங்களில் அவர் மீதான மரியாதையும் பாராட்டையும் புகழ்ச்சியையும் வெளிப்படுத்துகிறார். ஒரு பாடசாலை ஆசிரியையாகவும் பின்பு ஒரு பாடசாலை அதிபராகவும் கல்யாணியின் தொழில்சார்ந்த வாழ்க்கையின் மீது செல்வாக்குச் செலுத்தியவர் என்ற வகையிலும் அந்த வாழ்க்கையை வடிவமைத்தவர் என்ற வகையிலும் பேராசிரியர் ஜயசூரிய கல்யாணியைப் பொறுத்தவரை ஒரு முன்மாதிரியான ஆசிரியர் ஆவார். வகுப்பறையில் அவரிடம் படிக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியதில்லை. ஆயினும் 1950களில் என்னுடைய இரண்டாம்நிலை பாடசாலைக் கல்விப் பருவத்திலே கணிதம், எண் கணிதம், வீஜ கணிதம், வடிவ கணிதம் மற்றும் *கணித நவோதய* போன்ற அவருடைய ஒப்பற்ற பெறுமதியைக்கொண்ட சிங்கள மொழி மூல பாடப் புத்தகங்களின் வழியாக அவரை என்னால் அறிந்துக்கொள்ள முடிந்தது. 1960களின் நடுப் பகுதியில் நான் ஒரு உதவி விரிவுரையாளராகப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புலமைசார் தொழிலை வடிவமைத்துக்கொண்டிருந்த சமயத்தில் அவரை தனிப்பட்ட முறையில் அறிந்துக்கொள்ள முடிந்தது. இலங்கையின் பல்கலைக்கழகத் தொடக்க நாட்களான அப்போது பேராசிரியர் ஜயசூரிய மிகவும் மதிக்கப்பட்டதும் உத்வேகத்தைக் கொண்டதுமான புலமையாளர் குழுவின் ஒரு மாபெரும் ஆளுமையாளராக திகழ்ந்தவர் ஆவார். நம்மிருவருக்கிடையில் பரிமாறிக்கொள்ளப்பட்ட சொற்களின் எண்ணிக்கையானது மிகவும் சிறிது என்பது உண்மை. ஆயினும் எனக்கு உன்னைத் தெரியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறுவதைப்போல அமைந்த சாந்தமானதும் நட்பானதுமான புன்னகை அவருடைய முகத்தில் மலர்திருந்தமை எங்களுடைய கண்கள் சிரேஸ்ட பொது அறையில் சந்திக்கும்போதும் கொரிடோவில் என்னைக் கடந்துச் செல்லும் போதும் காணக்கூடியதாக இருந்தமையை என்னால் நினைவுக்கூர முடியும். குறிப்பாக நான் 1965ஆம் ஆண்டிற்குப் பின்பு அவருடைய மாணவர்கள் குழாமுடன் பழகத்தொடங்கியதில் இருந்து இது மேலும் உறுதியாகியது.

பேராசிரியர் ஜயசூரிய எல்லாவிதத்திலும் அவருடைய மாணவர்களுக்கு மிக்க ஆர்வத்துடன் பின்பற்றத்தக்க ஒரு முன்மாதிரியாக இருந்தார். அவருடைய சமகாலத்தவர்களையும் அதேபோல கனிஷ்டர்களையும் பொறுத்தவரை அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிபுணத்துவத் துறையில் அவருடைய தொழில் சார்ந்த அந்தஸ்தானது கம்பீரமானதாக இருந்தது. அத்துடன் அவர் தனிப்பட்டமுறையில் ஒழுக்கம் சார்ந்தது மிகவும் உயர்ந்த நிலையை வகித்தவர் ஆவார். அவருடைய வாழ்க்கைப் பாணியும் நண்பர்களுடன்கொண்ட உறவின்போது அவர் பின்பற்றிய நடத்தையும் எளிமையானதாகவும் கண்ணியமாகவும் இருந்தது. அத்துடன் சமூகக் கடமைப்பாட்டை சார்ந்த அவருடைய உணர்வுகளால் அவை மேலும் மேலோங்கி இருந்தன. இந்த நினைவுப்பேருரைத் தொடரில் என்னை அழைத்த அவருடைய மாணவர்களும் கல்யாணியும் அடிக்கடி என்னிடம் கூறியவற்றின்படி அவருடைய வகுப்பறை விரிவுரைகள் மிகவும் கவனமாக திட்டமிடப்பட்டவையாகவும் அறிவைத்தூண்டுகின்றவையாகவும் அத்துடன் மிகவும் செறிவும் செழுமையும், கோட்பாடு ரீதியானதும் பிரயோக ரீதியானதுமான உள்ளடக்கத்தைக்கொண்டதாகவும் இருந்தவையாக மிகவும் பாராட்டப்படுகின்றன. கோட்பாடு ரீதியாகவும் தத்துவ ரீதியாகவும் மிகவும் சிக்கலான கருத்துகளை முன்வைத்தலிலும் மற்றும் கலந்துரையாடுவதிலும் அவர் காட்டிய குறிப்பிடத்தக்க திறமையைப் பற்றி அவருடைய மாணவர்கள் புகழ்ச்சியுடன் பேசுகின்றமையை நான் கேட்டுள்ளேன். கல்வி மதிப்பிடுதல் என்பது அவருக்கு மிகவும் பிடித்தமான பாடப் பிரிவுகளுள் ஒன்றாக இருந்தது. அவர் கல்வி மதிப்பிடுதல் சார்ந்த பலவிதமான சிக்கலான விடயங்களை மிகவும் எளிமையாகவும் கவர்ச்சிகரமாகவும் கலந்துரையாடியமை பற்றிய வியப்பு அவருடைய மாணவர்களிடம் நிலவியது. அவருடைய மாணவர்களைப் பொறுத்தவரை அவருடைய விரிவுரைகள் ஒருபோதும் சோர்வுதருபவையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவில்லை என்பதுடன் அவை எப்பொழுதும் விவேகம், நகைச்சுவை மற்றும் கேலி என்பவற்றைக்கொண்டவையாகத் தான் இருந்தன. அவரிடம் இருந்து கிடைத்த தைரியம், நட்பு மற்றும் தந்தை பாசம் என்பன அவருடைய மாணவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டன.

பேராசிரியர் ஜயசூரிய அவர்களிடம் எனது மரியாதையை செலுத்துவதாக அமையும்படி என்னிடம் வழங்கப்பட்ட ***Inclusive University Education and the Public University in Sri Lanka*** (உள்ளடக்கல் பல்கலைக்கழக கல்வியும் இலங்கையில் அரசுப் பல்கலைக்கழகங்களும்) என்ற தலைப்பின் மீது கவனம் செலுத்த என்னை அனுமதிக்கமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இலங்கையின் உயர் கல்வி நிறுவன வரலாற்றின் தொடக்கமானது புராதன காலம் வரை செல்கின்றதொன்றாகும். அதேபோல இலங்கையில் "நவீன" பல்கலைக்கழகம் சார்ந்தும் குறிப்பிடத்தக்க நீண்டதொரு வரலாறு உண்டு. இந்நாட்டின் பல்கலைக்கழகக் கல்வியின் தொடக்கம் பற்றி பொருள்விளக்கம் செய்யும் முறையின்படி இலங்கையானது *130* வருடங்களுக்கு, *90* வருடங்களுக்கு அல்லது 70 வருடங்களுக்கு அதிகமான காலம் ஒரு நவீன பல்கலைக்கழகக் கல்வி முறைமையொன்று கொண்டுள்ள நாடொன்றாகும். தற்போதைய கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடமானது *1879* ஆம் ஆண்டில் அதன் பயிற்சிச் செயற்பாடுகள் தொடங்கிய காலத்து சுவடுகளுடன் தொடர்ச்சியான வரலாற்றினைக் கொண்டுள்ளது. இலண்டன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட *சிலோன் யுனிவர்சிற்றி கொலேஜ்* *1921* ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. பின்பு *1942* ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக கட்டளை சட்டத்தின் கீழ் கொழும்பில் இலங்கைப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான அடித்தளமாக அமைந்தது மருத்துவ கல்லூரியே ஆகும். எனவே இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வியின் அபிவிருத்தியானது பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலப் பிரிவிலே உள்நாட்டில் தொடங்கியது என்று கூறலாம். காலனித்துவ கடந்த காலத்தில் இருந்து வாரிசாகப்பெற்ற பல்கலைக்கழக கல்வி முறைமையை விரிவுப்படுத்தல் வேண்டும் என்ற ஒரு சனரஞ்சகமான கோரிக்கையை சுதந்திரத்திற்குப் பிற்பட்ட அரசியல் இயக்கங்களால் முன்வைக்கப்பட்டது. பாரம்பரிய பௌத்தப் பிக்கு கல்வி நிறுவனங்களான இரு ***பிரிவென*** நிறுவனங்களை புதிய இரு "நவீன"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகங்களாக 1959 ஆம் ஆண்டில் தரம் உயரத்தப்பட்டன. (1958 இல் இலக்கம் 45 பிரிவென பல்கலைக்கழக சட்டம்). இது மேலே கூறிய சனரஞ்சகமான கோரிக்கைக்கு காட்டிய மறுமொழி என்ற வகையில் நாட்டின் பல்கலைக்கழக கல்வி முறையை விரிவாக்கப்படுத்தும் பொருட்டு எடுக்கப்பட்ட ஒரு தொடக்க நடவடிக்கையாகக் குறிப்பிடலாம். ***வித்தியாலங்கார*** மற்றும் ***வித்யோதய*** என்ற இந்த பிரிவென நிறுவனங்கள் கல்வி சார்ந்த பிரதிமைகளாக (icons) நாட்டின் தேசிய அந்தஸ்தை பெற்றுக்கொண்டவையாகவும் உயர் படிப்பு நிறுவனங்களாக நீண்ட நிலையானதன்மைக்கொண்டவையாகவும் இருந்த நிறுவனங்களாகும்.

இலங்கைப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் தொடக்கத்தில் கொழும்பில் தாபிக்கபட்டதான தனி பல்கலைக்கழகம் மட்டுமே 1959ஆம் ஆண்டிற்கு முன்பு இலங்கையில் இருந்தது. பேராதனையில் படிப்படியாக உட்கட்டமைப்புகளை கட்டியமைத்த பின்பு இப்பல்கலைக்கழகத்தின் அமைவிடம் பேராதனைக்கு மாறியது. பேராதனையில் தாபிக்கப்படுதலும் திட்டமிடலும் சார்ந்த நடவடிக்கைகள் 1940களின் நடுப்பகுதியில் தொடங்கின. பேராதனையில் தன்னுடைய கற்பித்தல் செயற்பாடுகளை முதலாவதாக தொடங்கியது இலங்கைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பீடமே ஆகும். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனைக்கான இடமாற்றத்தின் மிக முக்கியமான கட்டமாக அமைந்தது 1952ஆம் ஆண்டில் கலைப் பீடம், பல்மருத்துவ பீடம் மற்றும் பொறியியற் பீடம் என்பனவும் நூலகம் மற்றும் நிர்வாக சேவைகளும் இடம் மாறியமையாகும். கொழும்பில் வளர்ச்சியடைந்திருந்த இலங்கைப் பல்கலைக்கழகத்து வசதிகளை கைவிடாமல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்புக் கிளையொன்று தாபிக்கப்பட்டு நடாத்திக்கொண்டுச் அவ்வசதிகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு கொழும்பில் தாபிக்கப்பட்ட கிளையானது பின்பு இலங்கைப்பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகம் என்று அழைக்கப்பட்டது.

1960களில் தொடங்கி எதேச்சையானதாக ஏற்பட்ட ஒரு வளர்ச்சி மற்றும் விரிவாக்கல் காலப்பிரிவுக்குப் பின்பு தற்போதைய இலங்கையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதான பதினைந்து பல்கலைக்கழகங்கள் உள்ளன. தொலைக் கல்வி வடிவத்திலான பாட நெறிகளை வழங்கும் திறந்த பல்கலைக்கழகம் தவிர மற்றைய இந்த எல்லா உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி நிறுவனங்களும் கற்றல் கற்பித்தலை சார்ந்த பாரம்பரிய வழிமுறைகளைப் பின்பற்றுகின்றவையாகதான் உள்ளன. பாடநெறிகளை வழங்குதல் தொடர்பான பாரம்பரியமற்ற பலவகையான வழிமுறைகள் கூட அவற்றினால் மேலும்மேலும் சோதிக்கப்பட்டன. இந்த பல்கலைக்கழங்களுடன் இணைக்கப்பட்டதாக பதினொரு பட்டப்பின்படிப்பு நிறுவனங்களும் உள்ளன. முதலில் கூறப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகார வரம்பிற்கு வெளியில் இயங்கும் நான்கு பல்கலைக்கழகங்கள் இந்நாட்டில் உள்ளன. பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம், புத்த ஸ்ராவக பிக்குப் பல்கலைக்கழகம், கொதலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் (Uniersity of Vocational Technoloy) என்பன இந்த நான்கு பல்கலைக்கழகங்கள் ஆகும்.

இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வி பல வருட காலமாகவே பல எண்ணிக்கையான பிரச்சினைகளை வெளிப்படுத்திக்கொண்டுள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தால் சில மாதங்களுக்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்த நடவடிக்கையானது இப்பிரச்சினைகளில் சிலதை வெளிக்கொணருவதாக அமைந்தது. இந்த பிரச்சினைகள் தொடர்பாக மாணவர்களாலும், அதிகாரத்துவங்களாலும், அக்கறைக்கொண்ட ஏனையவர்களாலும் அதேபோல சுயாதீன விமர்சகர்களாலும் எழுப்பப்படுகின்ற எல்லா விடயங்களையும் பற்றி பேசுவதற்கு ஏறத்தாழ ஒரு மணித்தியாலத்திற்கு உள்ளடக்கப்படும் இந்த விரிவுரையானது ஒருபோதும் போதுமானதாக இல்லை. அதேபோல இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளாக சிபார்சு செய்யப்பட்டுள்ள கொள்கைகளை விமர்சன ரீதியாக விசாரனை செய்யாமல் அமுல்படுத்தவும் முடியாது. எனவே நான் இந்தக் கலந்துரையாடல்களால் முன்வைக்கப்பட்ட இருவிடயங்களைப் பற்றி மட்டுமே கவனம் செலுத்துவேன். அவை என்னுடைய கவனத்தை ஈர்த்தவையாக இருக்கும் காரணத்தால் நான் அவற்றினை தேர்ந்தெடுத்தேன். அத்துடன் அவை உண்மையாகவே கலந்துரையாடப்படும் விடயத்துடன் தொடர்புடையவை என்று நான் நம்புகின்றேன். அவை கீழ் வருமாறு:

1) உள்ளடக்கல் (*Inclusiveness*) பல்கலைக்கழகக் கல்வி
2) அரசுதுறை பல்கலைக்கழக நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த கருத்தாடலின்பொருட்டு (discourse) நான் உள்ளடக்கல் பற்றிய மரபுவழுவாத பொருள்விளக்கத்தைத் தாண்டி செல்கின்றேன். நான் உள்ளடக்கல்தன்மைப்பற்றி இருமைப் பார்வையில் இருந்து கலந்துரையாடுவேன். அதாவது பல்கலைக்கழக அனுமதியை தேடும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பல்கலைகழக கற்றல் கற்பித்தலுக்காக உள்ள பாடங்களின் பாடத்துறைப் பரப்புத் திறமை (disciplinary coverage) என்ற அர்த்தங்களில் ஆகும். இவ்விரு விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலுக்கான ஒரு நுழைவாயிலாக வித்தியாசமானப் பல்கலைக்கழக மாதிரிகளை பற்றிய ஒரு சுருக்கமான அலசல் விவரணம் இந்த கலந்துரையாடலுக்கு பிரயோசனமானதாக அமையாலம்.

## 02) பல்கலைக்கழக மாதிரிகள்:

*1970* களுக்கு முன்பு உலகத்தில் எல்லா இடத்திலும் பல்கலைக்கழகம் என்பது குறிப்பிட்ட சமூகத்தின் மேட்டுகுடி வர்க்கத்தினரின் (elite classes) அக்கறைகளுக்குச் சேவையாற்றும் தீவிரமான மேட்டுகுடி நிறுவனங்களாகத்தான் இருந்தன. அக்காலக்கட்டத்தில் பல்கலைக்கழக முறைமையொன்று நிலவிய எல்லா நாடுகளிலும் பல்கலைக்கழகத்திற்கான மொத்த உள்வாங்கிக்கொள்ளல் விகிதம் (Gross enrolment ratio) பொதுவாக 10% வீதத்திற்கும் குறைவானதாகத்தான் இருந்தது. அதாவது "பல்கலைக்கழகம் செல்லும் வயது குழு" வை சார்ந்தவர்களாக இருந்த சனத்தொகை எண்ணிக்கையின் மிகவும் சிறிதளவிலான பகுதியே உண்மையாகவே உள்வாங்கிக்கொள்ளப்பட்டது. இலங்கையில் ஒரேயொரு பல்கலைக்கழகம் மட்டுமே இருந்த *1959*ற்கு முன்பு குறிப்பிட்ட காலப்பிரிவை சார்ந்த எந்தொரு "உத்தியொகபூர்வமான" புள்ளிவிபரங்களும் இல்லாத நிலையில் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கிக்கொள்ளும் சதவீதமானது *0.5%* வீதத்திற்கு குறைவானதாக இருந்திருக்கலாம் என்பது ஒரு நியாயமான ஊகம் ஆகலாம். பல்கலைக்கழகக் கல்வியானது அக்காலத்து உலகத்தில் போலவே இலங்கையிலும் மிகவும் மேட்டுக்குடியினருக்குரியதொன்றாகவே தான் இருந்தது. கல்வி சீர்திருத்தங்களுடலான பல தசாப்தங்களுக்குப் பிந்திய தற்போதைய நிலையில் பல்கலைக்கழக உள்வாங்களின் சதவீதம் தொடர்பாக கவனம் செலுத்தும்போது திறந்த பல்கலைக்கழகமும் உட்பட்டதாக சகல அரசுப் பல்கலைக்கழகங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்குதல் என்பது மிகவும் கவனமாக மேற்கொள்ளப்பட்ட அனுமானித்தலின்படி பார்த்தால் 07% வீதம் என்ற அளவில்தான் உள்ளது. திறந்த பல்கலைக்கழகமும் உட்பட்டதாக சகல அரசப் பல்கலைக்கழகங்களிலும் அதேபோல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பட்டங்களை வழங்கும் நிறுவனங்களிலும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பட்டங்களுக்காக மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்களிலும் பதிவு செய்யப்படும் மாணவர்கள் தொகை இந்த 07% வீதத்திற்குள் அடங்குகின்றது. எவ்வாறாயினும்

அ) உள்ளூர் பல்கலைக்கழகங்களில் வெளிவாரி மாணவர்களாகப் பதிவை மேற்கொள்ளும் "பட்டப்படிப்பு" மாணவர்களின் எண்ணிக்கை.

ஆ) "படிப்பிற்காக வெளிநாடு செல்லும்" உள்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கை என்பன இதில் உள்ளடங்கவில்லை. (நான் இதன்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொண்ட ஒரு கணக்கிடுதலை பயன்படுத்திக்கொள்கின்றேன்). மூன்றாம் நிலை மட்டத்தில் மொத்த உள்வாங்கிக்கொள்ளல் விகிதம் (பல்கலைக்கழகங்களுடன் ஏனைய மூன்றாம்நிலை கல்வி நிறுவனங்களையும் உள்ளடங்கலாக) யுனெஸ்கோ புள்ளிவிபரங்களில் வெளியிடப்பட்டுள்ளது. (இவை வெளிப்படையாகவே இலங்கை அதிகார நிலையினரால் வழங்கப்பட்டவையாக உள்ளன என்பதுடன் 07% வீதம் என்ற கணிப்பிடுதலின் போது கைவிடப்பட்ட மேலே கூறப்பட்ட இருவகை சார்ந்தவையும் உள்ளடக்கப்படுகின்ற). இது 2010 ஆம் ஆண்டில் 15% வீதம் என்ற மட்டத்தில் உள்ளதுடன் மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்த மட்டம் 75% விதத்திற்கும் மேல் என்ற மட்டத்தில் பெரும் வித்தியாசத்தை காட்டுவதாக உள்ளது. இதன்போது இலங்கை தெற்கு மற்றும் மேற்கு ஆசியாவைச் சார்ந்த ஒன்பது நாடுகளுக்குள் மூன்றாவது இடத்தை பெற்றுக்கொண்டு பெருமைக்குரிய இடத்தை வகிப்பதுடன் இலங்கைக்கு மேல்நிலையில் ஈரான் (43%) மற்றும் இந்தியா (18%) ஆகிய நாடுகள் உள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய சகாப்த காலத்தில் உலகத்தின் சில நாடுகளுடைய பல்கலைக்கழக முறைமையானது மேட்டுகுடி மாதிரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து சனரஞ்சக பல்கலைக்கழக மாதிரி என்று கூறக்கூடிய நிலைக்குப் படிப்படியாக மாறிக்கொண்டு வந்தமையை அவதானிக்கலாம். இச்செயற்பாட்டின் தொடக்கம் ஏனைய இடங்களை விட ஐக்கிய அமெரிக்க குடியரசிலே தொடங்கியது என்று நம்பப்படுகின்றது. கல்வியின் சனநாயக ரீதியான இயங்குதலை வலியுறுத்திய கல்விக்கோட்பாட்டாளரான ஜோன் டுயிற்கு (**John Dewey**) பின்பு இந்த சனரஞ்சக பல்கலைக்கழக மாதிரியானது டுயி மாதிரி (**Dewey model**) என்று அமெரிக்க குடியரசில் அழைக்கப்பட்டது. உயர் கல்வி நிறுவனங்களினதும் அவற்றின் மாணவர்களினதும் எண்ணிக்கையை பெருக்கமடைய செய்தமையானது சனரஞ்சக பல்கலைக்கழக மாதிரியின் பிரத்தியேகமான பண்பாகியது. பொது மக்களிடம் இருந்து மிகவும் தாராளமாகக் கிடைத்த நிதிகளால் இந்த விரிவாக்கலை அடைய முடிந்தது. 1960களில் இருந்த ஐக்கிய இராச்சியத்தில் செங்கல் பல்கலைக்கழகங்கள் (**Redbrick Universities**) மற்றும் ஐக்கிய அமெரிக்க குடியரசில் பெரும்நில பல்கலைக்கழகங்கள் (**Land Grand Universities**) என்பன குறிப்பிட்ட நாடுகளின் இந்த பல்கலைக்கழக நிலைமாற்றத்தின் முன்னோடிகளாகத் திகழ்ந்தன. மத்திய மற்றும் உழைக்கும் வர்க்கத்து மாணவர்களை அதிகமாக பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கிக்கொள்ளல் வழியாக சனரஞ்சக மாதிரியைச் சார்ந்த பல்கலைக்கழகங்கள் உள்வாங்கப்படும் மாணவர்களின் வீதத்தை அதிகரிக்கச் செய்தன. செலவு அதிக அரச பல்கலைக்கழகங்கள், குறைந்த வட்டி வீதத்தைக் கொண்ட கடன் வழங்குதல், புலமைப் பரிசில், தாராள மனமுடையவர்கள் வழங்கிய மாணியங்கள் என்பனவற்றின் ஊடாக பல்கலைக்கழகங்கள் மிகவும் சிறப்பானதாக சனநாயகமயப்படுத்தப்பட்டன.

1970களின் நடுப்பகுதியில் ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் டுயி மாதிரியின் வீழ்ச்சி தொடங்கியது. குறிப்பிட்ட காலப்பிரிவில் ஐக்கிய அமெரிக்க குடியரசு அரசாங்கம் முகங்கொடுத்த பல பொருளாதார நெருக்கடிகளின் விளைவாக இது நடந்தது என்று குறிப்பிடலாம். இதேபொருளாதார பிரச்சினைகளுக்கு குறிப்பிட்ட காலப்பிரிவில் ஐக்கிய இராச்சியமும் முகங்கொடுத்தது. இந்த நெருக்கடிகளுக்கு ஐக்கிய இராச்சியத்தில் மார்கிறட் தேட்சரின் தலைமைத்துவத்தின் கீழும் ஐக்கிய அமெரிக்க குடியரசில் றொனால்ட் றீகனின் தலைமைத்துவத்தின் கீழும் தீர்வாக "சிறு அரசாங்கம்" (small government)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தீர்வுப்பொதியே முன்வைக்கப் பட்டது. இது பின்பு உலகம் முழுவதும் "நவ தாராளமயம்" (neo-liberal) என்று அழைக்கப்பட்டது. இந்த நவ தாராளமயம் கொள்கைகளைப் பின்பற்றிக்கொண்டதன் காரணமாக அரசாங்கத்தின் செலவுகள் குறைக்கப்பட்டன. அதன் விளைவுகள் படிப்படியாக உயர் கல்வியிலும் பாதிப்புச் செலுத்தியது.

நவ தாராளமயவாதத்தின் கீழ் உயர் கல்விக்கான வியாபார மாதிரியானது "கூட்டு நிறுவன பல்கலைக்கழக" (Corporate University) மாதிரியானது. அதாவது அரசு மற்றும் தனியார் துறை சார்ந்த என்ற இரண்டு வகையான பல்கலைக்கழகங்களிலும் கூட்டு நிறுவன கட்டமைப்பு முகாமைத்துவ பாணிகளின் பயன்பாடு அதிகரித்தது. இந்தக் கூட்டு நிறுவன பல்கலைக்கழகங்கள் கூட்டவை (collegiate) மாதிரியை அல்லது பங்கீட்டு ஆட்சி (shared governance) மாதிரியை கைவிட்டதுடன் கூட்டு நிறுவன ஆட்சி (corporate goernance) கட்டமைப்புகள் அந்த இடத்தை பிடித்துக்கொண்டன. இந்த மாதிரியின் கீழ் பல்கலைக்கழகங்கள் வகை மாதிரியான புலமையாளர்கள் (typical academics) உள்ளடக்கத்தைக்கொண்டதாக என்று இல்லாமல் வியாபார அல்லது கூட்டுநிறுவன பின்னணியைக்கொண்டவையாக தாபிக்கப்பட்டன. கலைத்திட்டத்தின் (curriculum) மீது மிகவும் தீவிரமான பாதிப்புகளை செலுத்துகின்றவை உட்பட்டதாக பல தீர்மானங்கள் மேலிருந்து கீழ் என்ற நிலைமையைக்கொண்ட பிரமிட் வடிவத்தைக்கொண்ட அதிகாரித்துவங்களால் மேற் கொள்ளப்பட்டன. அரசு நிர்வாகம் அல்லது வியாரர நிர்வாகம், சட்டம் போன்ற தொழில்சார் கல்வியின் (professional education) வழியாக மிகவும் பலமான வருவாய் தாரையை புதிய கூட்டு நிறுவன பல்கலைக்கழகங்கள் தேடிக்கொண்டன. வியாபார முகாமைத்துவம் தொடர்பான முதுகலைமாணி நிகழ்ச்சியின் போது இது குறிப்பான உண்மையாகியது. அதிக விலைகொண்ட போதனை கட்டணங்களைக்கொண்ட இந்த தொழில்சார்ந்த நிகழ்ச்சிகள் எண்ணிக்கையில் அதிகமாக விரிவடைந்தன. எதிர்காலத்து பெரும் வருவாய் தாரைகளில் இருந்து இந்த அதிக பயிற்சி செலவுகளை ஈடுசெய்துக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்த விண்ணப்பதாரிகளுக்கு இந்தப் பாடநெறிகள் வழங்கப்பட்டன. தொழில்சார்ந்த பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளின் வழியாக கிடைக்கும் போதனை கட்டண வருமானங்கள் பல்கலைக்கழக ஏனைய பகுதிகளின் நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டது. சந்தையில் இருந்தோ அல்லது அரசாங்க மூலங்களில் இருந்தோ மாணவர்களுக்கு நிதியைக் கடனாக பெறக்கூடிய உத்தரவாதம் வழங்கப்பட்டதாக இருந்தது. கூட்டுநிறுவன பல்கலைக்கழகங்கள் கூட தங்களுடைய செயற்பாடுகளுக்கான நிதித்தேவைகளுக்கு வெளிநாட்டு மாணவர்களின் மீது அதிகமாக சார்ந்திருந்தன. இணையத்தளத்தினதும் நிகர்நிலை (on line) வகுப்புகளினதும் திடீர் தோற்றமும் இலாபத்திற்கான கல்வி தாபனங்களின் தோற்றமும் இந்த மாதிரியை மேலும் விரிவாக்க காரணமாகின. ஒன் லையின் நிகழ்ச்சிகளின் போது ஒரு பட்டதாரி பாடநெறியை அல்லது டிப்புளோமா பாட நெறியை சார்ந்த செலவு குறைந்ததாக இருந்தது. எனவே உபரிகளின் (surpluses) சாத்தியப்பாடுகள் அதிகரித்ததன் காரணமாக வகுப்பறை அளவு சார்ந்த சாத்தியப்பாடுகளை உயர்த்த முடிந்தது. இது கற்பித்தல் பீடத்தின் முதலீடுகள் குறைந்த நிலையடைய காரணமாகியது. புதிய சந்தைத் தேவைகளையோ அல்லது முன்னுரிமைகளையோ பிரதிபலிக்கின்றதாக கலைத்திட்டங்களை சீர்திருத்தம் செய்வதையும் மாற்றுவதையும் இலகுவானதாக செய்யக்கூடியமை ஒரு அனுகூலமாகப் பார்க்கப் பட்டது. ஆகவே பல்கலைக்கழக கல்வியானது ஒரு விலைப்பொருளாக மாறியது. வெளிநாடுகளில் தங்களுடைய நிகழ்ச்சிகளை முன்னெடுத்துக்கொண்டு செல்ல அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களை நியமித்தல் அல்லது இணைக்கப்பட்ட கல்லூரிகளை (Affiliated Colleges) அமைத்தல் போன்றவற்றினை பல்கலைக்கழகங்கள் இந்த வெற்றியடைவதற்கான பொறிமுறைகளாகப் பன்படுத்திக்கொள்ள தொடங்கின.

2008ஆம் ஆண்டில் இருந்து நிலவும் உலக பொருளாதார நெருக்கடியும் அதேபோல பல நாடுகளின் இறைக்கொள்கை சாாந்த (fiscal) சிக்கல்களினும் விளைவாக உயர் கல்வி முறைகளில் தனியார்மயப்படுத்தற் போக்கை வலுப்படுத்தியது. பிரித்தானிய அரசாங்கத்தின் ***உயர் கல்வி மாணவர்களை முறைமையின் இருதயமாக*** (2011 ஜூன்) என்ற வெள்ளை அறிக்கையானது இதன்போது குறிப்பிடத்தக்கதொன்றாகும். அது அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின் மீது உயர் கல்வி ஏற்படுத்தும் சுமையைக் குறைக்கும்பொருட்டு ஒரு நிலைத்துநிறுத்தக்கூடிய பத்திரமான நிலையின் (sustainable footing)அவசியத்தை அடையாளங்காட்டியது. அரசு நிதி வழங்குவதைத் தவிர்த்து தனிநபர் கடன் அல்லது தனியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானங்களுக்கு மேலதிகமாக மாணவர்களிடம் இருந்து பணம் அறவிடுதலின் வழியாக கிடைக்கும் வருமானத்தை அது அங்கீகரித்தது.

தோன்றிய சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக பல்கலைக்கழகங்களால் புதுப்பித்தல் வழிமுறைகள் வளர்க்கப்பட்டன. கூட்டுநிறுவன மாதிரி மேலே குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளைக்கொண்டு செயற்பட்டதன் காரணமாக உலகத்தில் உயர்ந்த செயலாற்றலைக்கொண்டிருந்த சில பல்கலைக்கழகங்கள் தங்களுடைய நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்யும்போது ஒரு தொழில்முயற்சியாண்மை கலாசாரத்திற்குரிய (entrepreneurial culture) மூலக்கூறுகளை அபிவிருத்தி செய்துக்கொண்டன. பல்கலைக்கழக முகாமைத்துவமானது மிகவும் அதிகமாகவே சந்தையை முன்னிலைப்படுத்தியதாக மாற்றிக்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்களின் நிறுவனமய மற்றும் ஆளும் கட்டமைப்புகள் என்பனவற்றிலும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. பாரம்பரிய மாதிரி போன்று இல்லாமல் பல்கலைக்கங்கள் தங்களுடைய கற்பித்தல், ஆய்வு செயற்பாடுகளைச் சார்ந்த முடிவுகளை எடுக்கும்போது முதலாவதாக நிதி சார்ந்த நிலையானத்தன்மைக்கும் அரசு நிதி வழங்குவதில் தங்கிருப்பதை குறைத்துக் கொள்ளலுக்கும் முதன்மை முக்கியத்துவத்தை வழங்கின. இரண்டாவதாக தொழில் உலகத்தைச் சார்ந்ததாக மாணவர்களின் தேவைகளைப் பற்றிய சிறந்த விழிப்புணர்வுடனும் மூன்றாவதாக சமூக அசைவியக்கத்தை (mobility) வளர்ச்சியடையச் செய்யவைப்பதாக பல்கலைக்கழகக் கல்வியின் சிறந்த உள்ளடக்கல்தன்மைக்கும் முக்கியத்துவம் கொடுத்தன. இதன்போது உலக வங்கி அபிவிருத்தியடையும் நாடுகளின் உயர் கல்வி முறைமைகளில் மாற்றங்களை உற்சாகப்படுத்துவதற்காக ஒரு முன்னணி வகிபங்கை எடுத்துக்கொண்டு *“உலகத் தரத்திலான பல்கலைக்கழகம்”* (world-class Uniersity) என்ற எண்ணக்கருவை அபிவிருத்தி செய்வதற்கும் அதனை மேலோங்கிக்காட்டவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த எண்ணக்கருவானது பல்கலைக்கழகங்களுக்கான நோக்குநிலையை வழங்குவதாக இருந்தது.

உலகத்தின் வேறு இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் மாற்றங்களை மேற்கொள்ளும் போக்குகள் இலங்கைப் பல்கலைக்கழக கல்வி முறைமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் சில விமர்சகர்களின் சிந்தனையிலும் எதிரொலித்தன. முறைமையில் நிலவும் பலவீனங்களை எடுத்துக்காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிச்சயமான நவ தாராளமய தீர்வுகளை பின்பற்றுவதற்கான முன்மொழிவுப் பிரேரணைகள் விருத்திச்செய்யப்பட்டன. தற்போது ஒரு தசாப்த காலமாக இலங்கையில் பல்கலைக்கழகச் சீர்திருத்தங்களின் மீது உலக வங்கியின் ஈடுபாடு மிக நெருக்கமாகவே உள்ளது. இலங்கையில் கலந்துரையாடபட்ட பல்கலைக்கழக சீர்திருத்த முன்மொழிவுகள் பலவற்றின் பின்னணியில் பல்கலைக்கழக முகாமைத்துவம் தொடர்பாக கூட்டுநிறுவன மாதிரியை சார்ந்த கருத்துக்களை இனங்காணக்கூடியதாக உள்ளன.

கடந்த மூன்று தசாப்த காலமாகவே இலங்கையின் சமூக பொருளாதார, பண்பாடு மற்றும் அரசியல் சூழலில் முக்கியமான மாற்றங்களை உருவாக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு காரணிகள் காரணமாகின. உலகமயமாக்கல் மற்றும் தாராளயமாக்கல் என்பனவற்றின் ஆழமான செயற்பாடுகள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் அதிகரித்த செல்வாக்குகள் மற்றும் அறிவுத்துறை ஊழியர்களின் (knowledge workers) பொருளாதார தேவைகளின் விரிவாக்கல் போன்றவை சூழ்நிலைச் சார்ந்த மாற்றங்களைக் கொண்டுவந்த சில சக்திகளாகக் குறிப்பிடலாம். எல்லைகளற்றதும் அதிகமாகவே தொழிற்நுட்ப ஆற்றலைக்கொண்டதுமான உலக பல்கலைக்கழக முறைமையானது உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்தியுள்ளது.

இந்தச் சூழ்நிலைச் சார்ந்த மாற்றங்களுக்கான எதிரிடையாக இலங்கைப் பல்கலைக்கழகங்களில் குறிப்பிடத்தக்க முக்கியத்து வத்தைக்கொண்ட சில உட்கட்டமைப்பு முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன என்பது உண்மை. இருந்தாலும் அவை வளர்ச்சியடையும் சவால்களை வெற்றிகொள்ளக்கூடிய அளவுக்கு போதுமானதாக இல்லை. கடந்த மூன்று தசாப்த காலமாக கலைத்திட்டம் மற்றும் கற்பித்தலியல் (pedagogical) சார்ந்த சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக இருந்தாலும் அவை மிகவும் மந்த நிலைக்கொண்டவையாகவும் ஒழுங்கீனத்தன்மை கொண்டவையாகவும் இருந்தன. அத்துடன் அவை நீண்டகால நோக்கங்களையற்றவையாகவும் இருந்தன. இந்தச் சீர்திருத்தங்களால் முறைமை சார்ந்த பாதிப்புகள் பரந்தளவில் மேற்கொள்ளப்பட்டதா? என்ற கேள்விக்கு பதிலளித்தல் என்பது கடினமானதாகதான் உள்ளது. கலைத்திட்டம் மற்றும் கற்பித்தலியல் சீர்திருத்தங்களை மேற்கொண்ட பல்கலைக்கழகங்களில் கூட அந்த சீர்திருத்தங்கள் தருக்க ரீதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுகளை (logical conclusions)அடையும்வரை ஒரு தொடர்ச்சியான பின்தொடரைக்கொண்டதாக இருக்கவில்லை.

1977ஆம் ஆண்டுக்குப் பிந்திய காலப்பிரிவில் பல்கலைக்கழகத் துறையை சார்ந்த அரசாங்க செலவீனங்கள் அதிகரிக்கப்பட்ட பல்கலைக்கழக எண்ணிக்கையைச் சார்ந்த தேவைகளை பூர்ததி செய்யக்கூடியதாக இருக்கவில்லை. அத்துடன் மாணவர்தொகை அதிகரிக்கப்பட்டமை சார்ந்த தேவைகளைப் பூர்த்திச்செய்யவோ அல்லது வழங்கப்படும் கற்பித்தல் மற்றும் ஏனைய சேவைகளின் தரத்தை வளர்ச்சியடையச் செய்யவோ கூடியதாக எந்தொரு முறையான வழியையும் கொண்டிருக்கவில்லை. அரசு வழங்கும் நிதியைக் குறைக்கும்போது அதற்கு முகங்கொடுக்கவும் நிதி வழங்கும் மாற்று வழிகளை அபிவிருத்தி செய்துக்கொள்வதற்கான ஆயத்தங்களையும் முறைமையானதாக வளர்த்துக் கொள்ளவில்லை. பல்கலைக்கழகங்களுக்கான அரசாங்க செலவீனங்கள் தற்போதைய விலைகளின்படி கூட ஒட்டுமொத்த அரசாங்கச் செலவீனத்தின் வீதமாகப் பார்க்கும்போது கடும் வீழ்ச்சியைக் காட்டுகின்ற. வழங்கப்படும் நிதியை இவ்வாறு குறைத்தல் என்பது பல்கலைக்கழகக் கல்வியின் தரத்தின் மீது பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்தது. பல்கலைக்கழகங்களின் சுயாதிபத்தியத்தைப் பறிக்கும் ஆளும் கட்டமைப்புகளும் மரபுவழுவாத நிறுவனக் கட்டமைப்புகளின் கண்டிப்பான தன்மையும் காரணமாக பல்கலைக்கழகங்கள் அரசுத்துறை நிறுவனங்கள் போலவே அரசியல் தலையீடுகளுக்கு அதிகம் உட்பட்டன.

### 3) மாணவர் உள்வாங்கிக்கொள்ளல் சார்ந்த உள்ளடக்கல்

இலங்கை உயர் கல்வித் துறையை சார்ந்ததாக மிகவும் அதிகமாகவே உணர்த்தப்பட்டதும் மிகவும் பரந்தளவில் கலந்துரையாடப்படுகின்றதுமான பிரச்சினையாக நிலவும் தேசிய பரீட்சை முறைமையின் கீழ் பல்கலைக்கழக நுழைவு அனுமதியை பெறுகின்றவர்களின் தொகை போதுமானதாக இல்லாமையைக் குறிப்பிடலாம். 2010 ஆம் ஆண்டில் க.பொ.த.(உ.த.) பரீட்சைக்கு தோற்றிய 230,000இற்கும் அதிகமான மாணவர்கள் தொகையின் 142,000மாணவர்கள் (62%வீதம்) ஏற்றுக்கொள்ளப்பட்ட குறைந்தப் பட்டச அளவுகோல்களின்படி பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப் படும் தகுதியைப் பெற்றார்கள். ஆயினும் இந்த எண்ணிக்கையின் 23,000ற்கும் குறைவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையைக் கொண்ட மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்டார்கள். அதன்படி க.பொ.த.(உ.த.) பரீட்சைக்குத் தோன்றிய மாணவர்களின் 09%வீதம் மட்டுமே பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியதுடன் அது குறைந்தபட்ச தகுதியைக்கொண்டவர்களின் 16%வீதம் மட்டுமே ஆகும். 2000ஆம் ஆண்டில் இருந்து 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பிரிவில் இந்த வீதங்கள் முறையாக 08% வீதம் மற்றும் 14.8%வீதம் என்ற நிலையில் உள்ளன. அந்த வருடங்களின் போது குறிப்பிட்ட சதவீதங்களின் ஒரு மந்த கதி அதிகரிப்பை இது காட்டுகிறது. பல்கலைக்கழக மாதிரிகள் தொடர்பான கலந்துரையாடலின் போது குறிப்பிட்டது போலவே இலங்கையின் பல்கலைக்கழக கல்வியின் தள உள்வாங்கல் சதவீதமானது (GER) இந்த நாட்டின் பல்கலைக்கழக கல்வி அபிவிருத்தியின் தொடக்க கட்டங்களின்போது 0.5%ற்கும் குறைவானதாகத்தான் இருந்தது. இந்தவீதம் ஒரு பிற்பட்ட காலப்பிரிவிற்குள் அதிகரித்தது. இன்று கூட உலகத்தில் மிகவும் குறைந்த வீதமாக தான் அது உள்ளது. அரசுப் பல்கலைக்கழகங்கள் மாணவர்களிடம் இருந்து போதனைக் கட்டணம் அறவிடுவதில்லை என்ற அர்த்தத்தில் இலங்கையில் பல்கலைக்கழகப் பட்டப் படிப்புக்கல்வி இலவசக் கல்வி முறைமை நடைமுறையில் உள்ளது.

புலமைப்பரிசில்கள் மற்றும் உதவிப்பணத்தொகை என்ற வடிவங்களில் தேவையான மாணவர்களுக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. இவற்றிக்கு மேலதிகமாக மாணவர்களின் குடும்ப வருமான மட்டத்தைப் பற்றி கவனம் செலுத்தாமல் மிக உயர்வாக அரசு நிதிகளை பயன்படுத்திக்கொண்டு திறமையை அடிப்படையாகக்கொண்ட (merit-based) புலமைப் பரிசில்களும் வழங்கப்படுகின்றன. இவை இரண்டாம்நிலை பாடசாலை கல்வியில் திறமைகாட்டிய மாணவர்களுக்குக் குறைந்தபட்சம் அவர்களின் ஒரு நல்ல பகுதிக்கு அவர்களுடைய குடும்பப் பொருளாதார நிலைமைகளைக் கவனத்திற் கொள்ளாமல் பல்கலைக்கழகங்களுக்கு நுழைவதற்கும் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்துக்கொள்வதற்கும் வாய்ப்புகள் வழங்குகின்றன. ஆயினும் எதிர்பார்ப்புகளைக்கொண்ட மாணவர்களுக்கு நியாயமானதும் சமத்துவமானதுமான அடித்தளத்தில் பல்கலைக்கழகக் கல்வியை பெறக்கூடிய வாய்ப்புகள் உள்ளன என்று வாதிடுவது கடினமானது. நிலவும் நிதி உதவி நிகழ்ச்சிகள் இரண்டாம்நிலை பாடசாலைக் கல்வியினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகக் கல்வியின் மூன்று அல்லது நான்கு (மருத்துவக் கல்வியின் போது ஐந்து) வருடங்களின் போதனையல்லாத கட்டண செலவுகளின் ஒரு பகுதியை – உண்மையாகவே ஒரு முக்கியமான பகுதியல்ல – மட்டுமே பூர்த்தி செய்கின்றதாக உள்ளன. ஓட்டு மொத்த உயர் கல்வித்துறைக்கான மொத்த உள்வாங்கல் சதவீதமானது (GER) தற்போதைய மதிப்பீட்டின் படி 15%வீதம் ஆகும். இதனை 2016 ஆம் ஆண்டு ஆகும்போது 20% வீதம் என்றவகையிலும் 2020 ஆம் ஆண்டில் 30%வீதம் என்ற வகையிலும் அதிகரிப்பை மேற்கொள்வதற்கான பிரயத்தனங்கள் உயர் கல்வி அதிகார மையங்கள் மேற்கொள்கின்றன. இந்த தசாப்தத்தின் முடிவில் இலங்கையின் இலக்கான தள உள்வாங்கல் சதவீதமானது (GER) தொழில்நுட்ப ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மிகவும் உயர்ந்த அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிறியதாகவேதான் காணப்படுகிறது. அபிவிருத்தி சார்ந்த ஐந்து மையங்களை வளர்ச்சியடையச் செய்தல் தொடர்பான தந்திரோபாயத்தின் ஒரு முக்கிய பகுதியாக நாட்டை ஓர் உலக அறிவு மையம் (global knowledge hub) என்ற நிலையாக்குதல் என்பது உள்ளது. இலங்கையை ஒரு சர்வதேச அறிவு மையமாக்குவதில் அரசாங்கம் உண்மையான அக்கறை கொண்டதாக இருப்பின் உயர் கல்வியில் மொத்த உள்வாங்கல் சதவீதமானது (GER) தற்போது உயர் திட்டமிடல்களில் எதிர்பார்ப்பதை விடத் துரித வளர்ச்சியை பெறச்செய்ய வேண்டும். அறிவு மையம் செயல்திட்டம் காரணமாக பல்கலைக்கழகங்கள் பலமான செயல்திறன் வகிபாகத்தைக்கொண்டதாகவும் தற்போதைய தள உள்வாங்கல் சதவீதமான (GER) 07%வீதத்தை தாண்டிச் செல்வதாகவும் அமைய வேண்டும்.

உயர் கல்வியின் தரத்தை வளர்ச்சியடையச் செய்துகொண்டு உயர் கல்வியை அடையக்கூடிய நிலைமையை அதிகரித்தல் தான் இலங்கையின் முன் உள்ள சவாலாகும். உயர் மட்டத்தைக் கொண்ட மனித வள உற்பத்திக்காக பங்களிப்புச் செய்யக்கூடிய போதனாவியல் நடைமுறைகள், கலைத் திட்டங்கள் மற்றும் பாட நெறிகளை வழங்கல் வேண்டும். பல்கலைக்கழகங்கள் கற்றல் கற்பித்தல் சார்ந்த தரத்தை வளர்ச்சியடையச் செய்ய வேண்டிய நிலையில் உள்ளன. வகுப்பறைகள், கேட்போர்கூடங்கள், ஆய்வுகூடங்கள், நிர்வாக அலகுகள், நூலகங்கள், விடுதிகள், மலசலக்கூடங்கள் மற்றும் உணவு விடுதிகள் போன்றவை சார்ந்த பௌதிக ரீதியான உட்கட்டமைப்பு வசதிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று ஏனைய வசதிகளையும் விரிவாக்கலும் அவற்றின் தரத்தை மேம் படுத்தலும் அவசியம். கற்றல் கற்பித்தல் கருவிகளின் போதாமையும் நூல்கள் உட்பட்ட ஏனைய நூலக வளங்களின் தேவைகளைப் பற்றியும் கவனம் செலுத்தல் அவசியம். பல்கலைககழகத்துறையில் சேவையாற்றும் மனித வளங்களின் அளவையும் தரத்தையும் மேம்படுத்தல் அவசியம்.

மூளைசாலிகளின் வெளியேற்றம் என்பது கல்வியாளர்களால் பரவலாகக் கலந்துரையாடப்பட்ட விடயமொன்றாகும். நிர்வாக மற்றும் உதவும் பணியாளர்களின் (supporting staff) சிறந்த கட்டியமைத்தலை உருவாக்கத்துக்குப் பல்கலைக்கழகங்களால் முடியாமல் போயுள்ளமையானது இதனை மேலும் சீர்குலைப்பதாக அமைந்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பிரகடனப்படுத்தப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனங்களின் வழியாகவும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பட்டங்களுக்கான பாடநெறிகளை வழங்கும் தனியார் கல்லூரிகளின் வழியாகவும் பல்கலைக்கழகத்துறையில் தேவையாக உள்ள விரிவுபடுத்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஒரு சிறிய பகுதியை நிறைவேற்றக்கூடியதாக இருக்கலாம். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் இணைவதற்கு நாட்டைவிட்டு செல்வதன் வழியாக பல்கலைக்கழகம் செல்லும் வயதிலுள்ள நபர்களின் ஒரு சிறிய பகுதியினர் பல்கலைக்கழகக் கல்வியை உறுதியாக்கிக்கொள்ள எதிர்பார்க்கின்றனர். ஆயினும் இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வியை விரிவாக்கல் மற்றும் வளர்ச்சியடையச் செய்தல் என்பனவற்றின் அதிகூடிய பொறுப்பானது அரசு துறைப் பல்கலைக்கழகங்களுக்கே உண்டு. இந்தப் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் விரிவாக்கவும் அரசு மிகப்பெரிய மூலதன முதலீட்டை மேற்கொள்ளல் அவசியமாக உள்ளது. தெளிவாகவே அரசுத்துறைப் பல்கலைக்கழகங்களின் தர உயர்த்தல், நவீனமயப்படுத்தல் என்பனவற்றிக்கு கணிசமான நிதி வழங்கல் தேவையாக உள்ளது. மாணவர்களிடம் இருந்து அறவிடப்படும் கட்டணங்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருக்கும் காரணத்தாலும் தனியார் நன்கொடைகள் மற்றும் நிதி வழங்குதல்கள் என்பன அதிகமாக வளர்ச்சியடையாத நிலையில் இருக்கும் காரணத்தாலும் பல்கலைக்கழகத் துறையின் விரிவுபடுத்தல் மற்றும் வளர்ச்சியடையச் செய்தல் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் அரச வரவுசெலவு நிதிகளின் மீதே தங்கியுள்ளது. உண்மையாகவே தற்போது ஒதுக்கப்படும் நிதியை விட பல மடங்கு நிதியை ஒரு நிலையான அடித்தளங்களை கொண்ட நோக்கில் வழங்குதல் அவசியம். அதேநேரம் என்னால் மேலே கூறப்பட்டது போன்ற ஏனைய சாத்தியப்பாடான நிதி மூலங்களையும் சந்தேகமின்றி பிரயத்தனம் செய்து பெறுதல் வேண்டும்.

வயது மூலங்களைக் காரணமாகக்கொண்டு உயர் கல்விற்கு செல்கின்ற எண்ணிக்கையின் வீதத்தை படிப்படியாக அதிகரிக்கும் தந்திரோபாயமான நடவடிக்கைகளை இரண்டாம் நிலை பாடசாலை மட்டத்தில் இருந்தே தொடக்க வேண்டும். அகில இலங்கை ரீதியான திறமை முறைமை பயன்படுத்திக்கொள்ளும் அதேநேரம் கல்வி வசதிகளின் பிராந்தியம் சார்ந்த சமநிகரற்றத் தன்மைகளை இல்லாமல் செய்யும் சூழ்நிலைகளின் நியாயமானத்தன்மையை உறுதிப்படுத்தலும் அவசியம். எனவே வசதி வாய்ப்புகள் குறைந்ததும் வளர்ச்சிகுன்றியதுமான பிரதேசங்களின் மீது அக்கறை செலுத்தும் சில நிவாரண பொறிமுறைகளும் குறுகியகால அளவுகோள்களாக பயன்படுத்திக் கொள்ளலாம். எவ்வாறாயினும் அவ்வாறான வசதிசவாய்ப்புகள் குறைந்த பிரதேசங்களின் இரண்டாம் நிலை பாடசாலைகளின் நிலைமைகளை வளர்ச்சியடைய செய்ய நீண்ட காலம் செல்லும் என்பது தவிர்க்க முடியாது. எனவே நாட்டின், தற்போதைய கல்வி முறைமையின் கீழ் அது அரசியின் கல்வி செலவீனங்களை மேலும் அதிகரிக்கப்படுவதாக அமையும். நாட்டில் பல எண்ணிக்கையான உதவித் திட்டங்கள் இருந்தும் பிரதானமாகவே நிதி நெருக்கடிகள் என்ற வடிவத்தைக்கொண்ட பொருளாதார கட்டுப்படுத்தல்கள் உயர் கல்வி கற்கவேண்டிய வயதிலுள்ள மாணவர்தொகையின் பெரும்பகுதியை உயர் கல்வியைப் பெறுவதை தடுப்பதை காணக்கூடியதாக உள்ளது. இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படகூடிய மாற்று வழியிலான நிதி வளங்கள் உயர் கல்வி நிறுவனங்களிடம் இல்லை. எனவே அரசாங்கத்தில் இருந்து பெருந்தொகை நிதியை முறைமையானதாக கோரி நிற்கும் இன்னொரு பிரதேசமாக இதனை குறிப்பிடலாம்.

## 3) கலைத்திட்டம் சார்ந்த உள்ளடக்கப்படுதல்

மூன்றாம் நிலைக் கல்வியின் போது பொதுவாகவும் பல்கலைக்கழகத்துறையை சார்ந்ததாகப் பார்க்கும்போது விசேடமானதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள பயிற்சி வழங்கப்பட வேண்டிய மாணவர் தொகையின் உள்ளடக்கப்படுதல் பற்றி கலந்துரையாடியுள்ளோம். இந்த உள்ளடக்கப்படுதல் பற்றி பரந்தளவிலான கலந்துரை யாடல்களை மேற்கொள்ளப்படவில்லையென்றாலும் உயர் கல்வி நிறுவனங்களில் கற்கக்கூடிய மாணவர்களின் விடயப்பரப்புகளின் (subject areas) உள்ளடக்கப்படுதல் சார்ந்த பல பிரச்சினைகள் உள்ளன.

கடந்த சில தசாப்த காலமாக உலகத்தின் பல நாடுகளுடைய பொருளாதார நிறுவனங்களில்,செயல்பாடுகளில் மற்றும் கொள்கைளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நவ தாராளமய தத்துவமும் சிந்தனையும் காரணமாகியுள்ளன. பொருளாதார காட்சிப்புலத்தில் ஏற்பட்ட இந்த மாற்றங்களால் கல்வி செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் உட்பட்டதாக மனித வாழ்க்கையின் எல்லாத் தோற்றப் பாடுகளிலும் விஸ்தாரமான தாற்பரியங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உயர் கல்வி நிறுவனங்கள் போன்ற வணிகமல்லாத அமைப்புகளுடைய இயங்குதலின் போது கூட இலாபங்களின் அல்லது உபரிகளின் (surpluses) முக்கியத்துவம் கோடிட்டுக்காட்டப்படுகிறது. நவ தாராளமயவாதத்தின் ஆதிக்கம் தொடங்குவதற்கு முன்பு கல்வியானது பொது நலனுக்கான தொன்றாகத்தான் கவனிக்கப்பட்டது. ஆயினும் நவ தாராளமயமானது கல்வி நிறுவனங்களை நடாத்திச் செல்லல் என்பது அதிகமாகவே வணிக ரீதியான அடிப்படைகளைக்கொண்ட விடயமாகவே பார்க்கப்பட்டது. மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை வளர்ச்சியடையச் செய்தல் மற்றும் விநியோகித்தலின் சமநிலை பேணுதல் போன்ற ஏனைய மிக முக்கியமான தேசிய குறிக்கோள்கள் கைவிடடு பொருளாதார வளர்ச்சி என்பதை தேசிய கொள்கை வகுத்தலின்போது முன்னுக்கு எடுக்கப்பட்ட குறிக்கோளாகியது. ஏற்றுக்கொள்ளப்பட்ட நவ தாராளமயவாத கொள்கைக்கட்டுக்குள் ஓட்டையான நிலைமைக்கொண்ட வறுமை குறைத்தல் பொறிமுறையின் பிரயோசமற்றத்தன்மையை புரிந்துக்கொள்ளக் கூடியது. ஆயினும் "வறுமை குறைத்தல் வளர்ச்சி தந்திரோபாயம்"என்று அழைக்கப்படும் கட்டுக்குள் பொருளாதார வளர்ச்சிக்கு இரண்டாம் நிலையில் வறுமை குறைத்தல் உள்ளது.

இந்தப் பொருளாதாரக் கொள்கை மாற்றங்கள் இலங்கையில் கூட கல்வி முறைமையின் மீது மிக முக்கியமான பாதிப்புகளை ஏற்படுத்துவதாக உள்ளன. கல்வி வெளிப்படையாக ஒரு கருவி ரீதியான பெறுமதியைக்கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வருமானம் வரக்கூடியதான தொழிலுக்காகப் பயிற்சியளித்தல், இலாபம் தரக்கூடிய தொழிலுக்கோ அல்லது ஒரு எளிமையான தொழிலுக்கோ பயிற்சியளித்தல் என்பது கல்வியின் ஒரு அடிப்படையான குறிக்கோளாக கருதலாம் என்றாலும் அதுதான் கல்வியின் ஏக குறிக்கோளாக இருக்க முடியாது. ஏனைய மக்களுடன் நல்லிணக்கத்தடன் வாழக்கூடிய திறனையும், சிந்தனை மற்றும் கற்பனையாற்றலைச் சார்ந்த மனித செயல்துறைகளின் வளர்ச்சியையும், நாங்கள் கல்வியின் வழியால் எதிர்பார்க்கின்றோம். தொழில்முறையை சார்ந்த கருவியாக கல்வியின் பெறுமதி சமீப காலத்தில் பெரும் வீச்சைக்கொண்டதாக உயர்ந்தமையானது கல்வி நிறுவனங்களில் எது கற்பிக்கப்பட வேண்டும் எது கற்பிக்கப்படக்கூடாது என்பது பற்றி தீர்மானிப்பதில் மிகவும் நெருங்கிய செல்வாக்கை செலுத்தும் காரணியாகியது. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கல்வி ஊக்குவிக்கப்பட்டுள்ள அதேநேரம் மனிதப்பண்பியல் பாடங்கள் (humanities), சமூக விஞ்ஞானம் மற்றும் ஆற்றுகைக்கலைகள் சார்ந்த பாடங்களை அவசியமில்லாத வையாகக் கருதும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் போக்கு தொடருமாக இருந்தால் உலகம் முழுவதிலும் மக்கள் சுய சிந்தனைகொண்டவர்களாகவும், பாரம்பரியங்களை விமர்சனத்திற்கு உட்படுத்துபவர்களாகவும் மற்றவர்களின் வேதனைகளும் வெற்றிகளும் கொண்டுள்ள முக்கியத்தவத்தை புரிந்துகொள்ளக் கூடியவர்களாகவும் என்ற வகையில் முழுமையான பிரசைகளாக்குவதை விட பயனுள்ள இயந்திரங்களை உருவாக்கும் பரம்பரையினராக மாறலாம். விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் இருக்கின்றவற்றை விட மிகவும் தெளிவான தேவையான ஏனைய சில ஆற்றல்கள் உள்ளன. அவை மனிதனுக்குத் தன்னுடைய வாழ்க்கையை முழுமையாக்கிக்கொள்ளவும் மேலும் உள்ளடக்கங்களைக்கொண்டதான பிரசைத்துவத்தை (citizenship) அடைவதற்கும் பிரயோசனமானதாக அமைகின்றன. வலுவானதும் செழிப்பானதுமான வளர்ச்சியைப் பெற்ற பொருளாதாரம் என்பது ஒரு நாட்டின் தேசிய அக்கறையாகும் என்பது பற்றி சந்தேகம்கிடையாது. அவ்வாறானதொரு பொருளாதாரத்தின் ஒரு முக்கியமான அங்கமாக வியாபாரங்களின் வளர்ச்சி இருக்கலாம். ஆயினும் ஒரு நாட்டின் பிரசைகள் சுதந்திரமான, சனநாயக சூழ்நிலைகொண்டதுமான,விமர்சன ரீதியான, மற்றும் ஆக்கத்திறனைப் புதுப்பித்தலைக்கொண்டதுமான கலாசார நிலைமைகளை அனுபவிக்கும் போதே மனித வாழ்க்கை முழுமை யடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதப்பண்பியற் கற்கைள் மற்றும் கலைகள் சார்ந்த கல்வியானது அத்தியாவசியமானதும் இன்றியமையாததுமான நிலைமையை உருவாக்கின்றன. 1948ஆம் ஆண்டு உலக மனித உரிமைப் பிரடனத்தில் இது கீழ்வருமாறு குறிப்பிடப்படுகிறது. "கல்வியானது மனிதனின் ஆளுமையை முழுதாக விருத்தி செய்யுமுகமாகவும் மனித உரிமைகளுக்கும் அடிப்படைச் சுதந்திரங்களுக்குமான மரியாதையை வலுப்படுத்துமுகமாகவும் ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். அது சகல நாடுகளுக்கிடையேயும், இன அல்லது மதக் குழுவினருக் கிடையேயும் மன ஒத்திசைவு, பொறுதியுணர்வு, தோழமை ஆகியவற்றை மேம்படுத்தல் வேண்டும்".

1970களின் இறுதியில் இருந்து நவ தாராளமய கொள்கைகளின் வழியில் இலங்கை மேற்கொண்ட பயணத்தின்போது முழுமையான தொழில் நிலை மற்றும் வறுமை குறைத்தல் போன்ற சமூகமய தேசிய குறிக்கோள்கள் முக்கியமானவையாக கோடிட்டுக்காட்டப் பட்டுள்ளன."பொருளாதார வளர்ச்சி" என்ற குறிக்கோளானது உண்மையான தேசிய வருமானம் (தொழில்நுட்ப ரீதியாக மொத்த தேசிய உற்பத்தி அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தி) அல்லது உண்மையான தனிநபர் தேசிய வருமாணம் (real national income per capita) வளர்ச்சியடைந்தலை கருத்தில்கொண்டு பொருள்விளக்கப்படுகிறது. எவ்வாறாயினும் இது அரசாங்கத்தின் குறிக்கோளான செயற்பாட்டின் முக்கியத்துவத்துடன் பொருந்துவதாக உள்ளது.சில தசாப்தங்களில் 08% வீதத்திற்கும் 10% வீதத்திற்கும் இடையிலானதாக அமைந்த பொருளாதார வளர்ச்சியானது எதிர்பார்க்கப்பட்டதொன்றாக இருந்தாலும் அது ஒரு நிலையான அடித்தளத்தைக்கொண்டதாக அமையவில்லை. 1978 மற்றும் 2010–2011 என்ற இரு தனித்த காலப்பிரிவுகளில் அடைந்த ஆகக்கூடிய வீதமாக 08% வீதம் உள்ளது. 2009 ஆம் ஆண்டு இறுதியில் சமாதானத்தின் மீள் வருகையுடன் வளர்ச்சியின் உயர் வீதங்ளை அடைவதற்கான மிகவும் கடுமையான கொள்கைப்பிடிப்பு வலிறுத்தப்பட்டள்ளது.

நவ தாராளமயவாதம் அத்துடன்தொடர்புடைய அலட்சியத்துடன் வேறு இடங்களில் செயற்பட்டுள்ளது போலவே இலங்கையிலும் செயற்பட்டு சமூக பிரச்சினைகளின் வரிசைக்கு வழிவகுத்தன. சமூகப் பிரச்சினைகள் வளார்ச்சியடைய செய்யும் விதமாக நவ தாரளாமயவாத கொள்கைகட்டுக்குள் இந்த கொள்கைகள் தோன்றியுள்ளன. வருமானம் பகிர்தல் சார்ந்த சமநிகரற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையை மேலும் மோசமடைந்துள்ளமையை புள்ளிவிபர ஆய்வுகள் காட்டுகின்றன. அதிகாரப்பூர்வமான புள்ளிவிபரவியல் கணக்கிடுதல்களால் காட்டுவதை விட இன்றைய சார்புச் சமமின்மை (relative ineqality) அதிகமாகதான் இருக்கலாம் என்பது மதிப்பிடுதல் சார்ந்த பிரச்சினைகளை அறிந்த மக்களிடம் நிலவும் சந்தேகம் ஆகும். சனநாயகத்தன்மைகொண்ட சமூக–அரசியல் உறவுகள், நல்லிணக்கத்தைக்கொண்ட இன,சமய, பால்நிலை உறவுகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தைச் சார்ந்த பல எண்ணிக்கை யான பார்வைகள் போன்ற விடய்ங்கள் நவ தாராளமயவாத கொள்கையால் கவனிக்கப்படாத ஏனைய பகுதிகள் ஆகும். உயர் கல்வி மட்டத்தின்போது விஞ்ஞானமும் தொழிற்நுட்பமும் போலவே முகாமைத்துவம் போன்ற வருமானத்தை தரகூடியதான (remunerative)வேலைகள் கருவியியல் சார்ந்த விழுமியத்தை (instrumental value)கொண்டுள்ளவையாகவும் எனவே மனிதப்பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பெருமளவில் அலட்சியப்படுத்தப்படுகின்றவையாகவும் அமையுமானால் உயர் கல்வியின் வழியாக சமூகத்தின் முக்கியமான தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் குழுவொன்று மிதமிஞ்சிய சமநிலையற்றதன்மை, நேர்மையும் நியாயமானதன்மையும் அற்ற நிலை, சனநாயக ரீதியான நல்லாட்சியிலும் மனித உரிமைகளிலும் தோல்விகண்ட நிலை, இன மற்றும் சமய ரீதியாக பகைமையைக்கொண்ட நிலை, பால்நிலை உறவுகளை மீறியதான நிலைமை என்பன வற்றினைக்கொண்டவர்களாகவும் மிகவும் முக்கியமான சமூகப் பிரச்சினைகளின் போது அசிரத்தைகாட்டுகின்றவர்களாகவும், உணர்ச்சியற்றவர்களாகவும் மாறலாம்.

பொதுவாக கல்வியிலும் குறிப்பாக உயர் கல்வியிலும் அவ்வாறான முக்கியமான சமூக விடயங்கள் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக உருவாகிய பிரதிகூலமான சமூக மற்றும் அரசியல் விளைவுகள் மிகவும் அதிகமாகக் காணக்கூடியதாகத்தான் உள்ளன. அவ்வாறானதொரு பக்கச்சார்பான கல்விமுறைமையின் நீண்டகாலப் பாதிப்புகள் வளர்ச்சிப் பாதையை அடைய முடியாதவாறு பிளவுகளை உருவகாக்குவதாக அமையும். இலங்கை உள்ளிட்ட பெரும்பாலான நாடுகளில் நவ தாராளமய கல்விச் சீர்திருத்தங்கள் மனிதப்பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திற்கான நிதி வழங்குவதை துண்டிக்கின்றதான நிலைமையை உருவாக்கி யுள்ளன. கடந்த பல தசாப்த காலமாகவே இலங்கையின் உயர் கல்வியின் அதிதீவிர தொழில் மையப்படுத்தலானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(excessive carrer-focus) மனிதப்பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானம் சார்ந்த மாணவர்களுடைய அக்கறையை வீழ்ச்சியடையச் செய்துள்ளது. அத்துடன் பரஸ்பரமாக இந்த பாடங்களுக்காக வழங்கப்படும் நிதித்தொகையும் வீழ்ச்சியடைந்துள்ளது. மருத்துவம், பொறியியல், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் உட்பட்டதாக தகவல் தொழில்நுட்பம், முகாமைத்துவம் மற்றும் அவற்றுடன் சார்ந்த பாடங்களும் அதேபோல சட்டப் படிப்புகள் என்பனவற்றுக்கும் எதிரான பாடங்களாகவே மனிதப்பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானம் சார்ந்த பாடங்கள் பார்க்கப்படுகின்றன. கலை இலக்கியங்களையும் சமூக விஞ்ஞானம் உட்பட்டதாக மனிதப்பண்பியல் பாடங்களின் மீது அலட்சியத்தை கட்டியமைக்கின்றதாகத்தான் நவ தாராளமய கொள்கை மனச்சார்புகளின் பொருள்விளக்கப்படுத்தலுக்கு அமைய பார்க்கும்போது "பொருளாதார வளர்ச்சிக்கான கல்வி"யாக உள்ளது. உலகத்தின் ஏனைய இடங்களில் போலவே இலங்கையிலும் லிபரல் கலைகளுக்கு (liberal Arts) வியாபார தலைவர்களிடம் இருந்தும் அதிகாரநிலை ஆட்சியாளர்களிடம் இருந்தும் எதிர்ப்புகள் கிளம்புகின்றன. ஆயினும் அவர்களில் பலர் அல்லது பெரும்பாலானோர்கள் ஒரு லிபரல் கலைப் பாடத்தில் உயர் கல்வியை கற்று அவற்றின் வழியாக தற்போதைய பதவிகளுக்கு வந்தவர்கள் ஆவார்கள்.

உத்தியோகத்திற்காகவோ அல்லது தொழிலுக்காகவோ ஒரு நபரை அறிவூட்டலுடன் தயார்ப்படுத்தல் என்பது கல்வியின் கட்டாய பணியாக இருக்க வேண்டும் என்பது பற்றி தெளிவாகவே ஒரு விவேகமுள்ள நபரிடம் கருத்து முரண்பாடுகிடையாது. அது உண்மையமாகவே கல்வியின் மிக முக்கியமான குறிக்கோள் ஒன்றாகும். ஆயினும் அதுதான் கல்வியின் ஒரேயொரு அல்லது பிரதான குறிக்கோள் என்று கருத முடியாது. ஹாவேர்ட் பல்கலைக்கழகத் தலைவர் ட்றேவ் வோஸ்ட் (Drew Faust) கூறியுள்ளதன்படி "மனிதர்களுக்குத் தொழில் போலவே அர்த்தம், புரிந்துக்கொள்ளல் மற்றும் பார்வைகள் என்பனவும் அவசியம். இப்போதுள்ள கேள்வியானது இந்த காலங்களில் அவ்வாறான நோக்கங்களை நம்புவதற்கு எங்களால் முடியுமா? அல்லது முடியாதா? என்பதேயாகும்". கலந்த லிபரல் கலைக் கல்வியானது ஒரு உத்தியோகத்திற்கான தயார்ப்படுத்தலுடன் பிரசைத்துவம் மற்றும் வாழ்க்கை சார்ந்த தயார்ப்படுத்தல்களையும் இணைத்ததாகவே உள்ளது. சிறந்த கல்வியை அடைவதன் வழியாக உத்தியோகத்தில் வெற்றியடைவதற்கு தயார்ப்படுத்தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ள மனிதப்பண்பியற் கல்வியின் வழியாக கிடைக்கின்ற ஒரு செயல் தொடர்ந்து மேற்கொண்டுச்செல்லும் திறன் காரணமாக அமைகிறது. சிறந்த கல்வியானது மாணவர்களை சிந்தனையாற்றலைக்கொண்டவர்களாகவும், கடமைப்பொறுப்பு உணர்வைக்கொண்டவர்களாகவும் உள்ள பிரசைகளாக தயார்ப் படுத்தலாக அமையும். இந்தக் குறிக்கோளை அலட்சியம் செய்யும்போது கலைத்திட்டத்தில் இருந்து மனிதப்பண்பியல் சார்ந்த மூலக்கூறுகள் கிழித்தெறியப்படுவதாக அது அமையலாம். கேள்வி எழுப்புதல்,விமர்சன ரீதியான சிந்தனை மற்றும் சிறந்த கடப்பாட்டைக்கொண்ட பிரசைத்துவத்தை அடையத் தேவையான ஏனைய மூலகாரணிகளை வளர்ச்சியடையச் செய்யும் கற்றல் கற்பித்தல் வகைகளில் இருந்து கல்வி விலகிச் செல்வதற்கு காரணமாகலாம். கல்வியானது ஒரு தொழிலுக்கானது என்பதை முதன்மைப்படுத்தலும் ஆதிக்கமிகுதியோடும் முயற்சித்தலும் அது காரணமாகலாம். அவ்வாறானதொரு கல்வியானது நல்ல பெறுபேறு களுக்காக கல்வியை பலாத்காரமாக புகட்டுகின்றதொன்றாகவும் குருட்டுப் படிப்பைத் தைரியப்படுத்தும் நடைமுறையொன்றாகவும் அமையலாம். எனவே இந்தப் பிரச்சினையின் ஒரு பகுதி பாடநெறிகளின் உள்ளடக்கதை சார்ந்தாகவும் அடுத்த பகுதி கற்பித்தலியல் சார்ந்ததாகவும் உள்ளது.

பொருளாதார நெருக்கடிகளையும் இறை நெருக்கடிகளையும் (fiscal deficits) கொண்ட காலங்களின் போது நவ தாராளமய கொள்கைகள் வரிப்பணம் அறவிடுதலை அதிகரிக்க ஒத்துழைக்காத காரணத்தால் வரவு செலவுதிட்ட இடைவெளியை குறைக்கும் பிரதான பொறிமுறையாக செலவீனங்களை வெட்டுதல் என்பதை பயன்படுத்திக்கொண்டு வந்துள்ளது. வரிப்பண அதிகரிப்புக்கான எதிர்ப்புகள் பலமான சமூக வட்டங்களில் இருந்து கிளம்புகின்றன. முதலீடுகளுக்கான உற்சாகமூட்டுதல்களை வளர்ச்சியடயச் செய்யும்படியாக வரிகளை நீக்க வேண்டும் என்ற சிபார்சையும் கடும் உழைப்பை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றன. இந்த கொள்கைக்சட்டகத்திக்குள் அடைக்கப்படும்போது செலவீனங்களை குறைத்தலின் காரணமாக அத்தியாவசியமாகவே பற்றாக்குறைப் பிரச்சினை ஏற்படுகின்றது. அரசாங்கத்தால் வெட்டப்படுவதற்காக கோடாலியின் கீழ் கொண்டுவரப்பட்ட செலவீன வகைக்குள் கல்விற்கான செலவீனங்களை பொதுவாகவும் பல்கலைக்கழகங் களுக்கான செலவீனங்களைக் குறிப்பாகவும் உள்ளடக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகங்களை வியாபார நிறுவனங்கள்போல முகாமைத்துவம் செய்யவேண்டும் என்ற அழுத்தங்கள் அரசாங்கத்தில் இருந்து வருவது போலவே உலக வங்கி போன்ற சர்வதேச ஆலோசகர்களிடம் இருந்தும் பல்கலைக்கழகங்களின் மீது திணிக்கப்படுகின்றன. பொதுவான நிதி நெருக்கடிகள் காரணமாக அரசாங்கம் பல்கலைக்கழகங்களுக்குச் செலவீன ங்களுக்காக வழங்கும் நிதியை குறைக்கும்போது கூட்டுநிறுவன மாதிரியைக்கொண்ட பல்கலைக்கழக நிர்வாகம் வழியாக "உற்பத்தித்திறனை வளர்ச்சியடையச் செய்தல்" (productivity improvement) சிபார்சு செய்யப்படுகிறது. உள்ளக செலவுகளை குறைத்தல் என்றே இது பெரும்பாலும் அர்த்தப்படுத்தப்படுகிறது.

பல்கலைக்கழகங்களுக்குள் மேற்கொள்ளப்படும் இந்தச் செலவு வெட்டும் நடவடிக்கைகள் பெரும்பாலும் மனிதப்பண்பியற் கல்வியையும் சமூக விஞ்ஞானங்களையும் இலக்காகக்கொள்கின்றன. குறிப்பிட்ட இந்த பாடங்களுக்கான செலவீனங்களை வெட்டுதல் என்பது ஏனைய பீடங்களின் செலவீனங்களுடான ஒப்பிடுதலின் போது பொதுவாக அதிகமான வீதத்தைக்கொண்டுள்ளது.

பல்கலைக்கழகக் கல்வியின்போது நவ தாராளமய கொள்கை ஆட்சி முறைமையை தைரியப்படுத்தலானது பல்கலைக்கழகக் கல்வியின் இன்னும் சில பெறுமதியான பார்வைகளை இழக்க வழிவகுக்கின்றதை காணக்கூடியதாக உள்ளது. உலகத்தின் ஏனைய இடங்களில் போலவே இலங்கையிலும் பல்கலைக்கழகங்கள் நாட்டின் கலாசார வாழ்க்கையிலும் பொதுசன வாழ்க்கையிலும் மையமாக செயற்படுகின்றன. ஆயினும் அரசாங்கம் அவ்வாறான செயற்பாடுகளுக்கு உதவி வழங்க தவறியுள்ளது. 1960களிலும் 1970களிலும் இலங்கையின் கலாசார மறுமலர்ச்சிக்கு பேராதனையில் அமைந்திருந்த இலங்கைப் பல்கலக்கழகம் செய்த பங்களிப்பையும், அப்பல்கலைக்கழகத்தின் புலமையாளர்களாகவும் மாணவர்களாகவும் இருந்துகொண்டு குறிப்பிட்ட மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தவர்களைப்பற்றிய தகவல்களையும் சிறப்பாக பதிவு செய்யப்பட்டதாகவும் பரந்தளவில் அறியப்பட்டதாகவும் உள்ளன. இவர்களுக்குள் பலர் கலைப்பீடத்தை சார்ந்தவர்கள் என்பது பொதுசன அறிவாக உள்ளது. கலாசார புதுப்பித்தலுக்கு கலைகள், மனிதப்பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் என்பன அடிப்படைத் தேவைகளாக அமைகின்றன. தெளிவாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற் பாதைகளைக்கொண்டுள்ளவை என்று தொழில்சாந்த (professional) மற்றும் வாழ்க்கைத்தொழில் சார்ந்த (vocational) பாடநெறிகளின் மீதான அதீத பாரபட்சத்தன்மையானது இலங்கையில் வழக்கத்தில் இருந்த பல்கலைக்கழகத்து பரந்த பார்வை 1980களுக்குப் பின்பு சிதைக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டதொன்றாகும். பல்கலைக்கழகத்தின் முக்கியமான சமூக மற்றும் கலாசார பணிகள் பெருமளவில் அலட்சியப்படுத்தப்பட்டன. உலகத்தின் எல்லா இடத்து பல்கலைக்கழக கலைத்திட்டங்களிலும் மருத்துவம், பொருளியல், விஞ்ஞானம், வணிகமும் முகாமைத்துவமும், சட்டம், கலை என்ற வகையில் பாடத்துறை (disciplinary) பிரதேசங்களாக பலதுறைகளாக பிரிக்கப்பட்டும் பகுதிகளாக்கப்பட்டும் உள்ளன. இலங்கை மாணவர்கள் தங்களுடைய இரண்டாம் நிலைப் பாடசாலைக் கல்விக் கட்டத்தின்போதே தங்களுடைய இயல்பான திறமைகளையோ அல்லது உண்மையான கல்விசார் விருப்பங்களையோ கவனத்திற் கொள்ளாமல் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் வழிகாட்டலின்படி இந்தத் தனித்த பிரிவுகளில் இருந்து ஏதாவது ஒன்றை மையமாகக்கொண்டு உயர் கல்விக் கட்டமைப்பிற்குள் தங்களைத் தயார்படுத்திக்கொள்கிறார்கள்.

பல்வகையான பாடங்களில் திறமையும், புலமையும் மற்றும் விருப்பத்தேர்வுகளையும் கொண்டுள்ள மாணவர்களையும் உட்பட்டதாக எல்லா மாணவர்ளும் பல்கலைக்கழகங்களில் பாடத்துறைகளுக்கிடையேயான (interdisciplinary ) கற்கை களைப்பற்றி பிரயோசனமான எந்தொரு தயார்ப்படுத்தலும் இல்லாமல் ஒரு பாடத்தின் எல்லைக்குள் தங்கியிருக்க வற்புறுத்தப்படுவதாக தான் உள்ளது. அவர்கள் ஏனைய பாடப் பரப்புகளிலுள்ள தங்களுடைய திறமைகளையும் சாமர்த்தியங்களையும் கைவிடுகிறார்கள். பல்கலைக்கழகக் கல்வியின் இந்தத் தயார்ப்படுத்தல் காரணமாக அபிவிருத்தி சமூக, கலாசார மற்றும் அரசியல் மட்டங்களில் முக்கியமான தோல்விகளை சந்திக்கின்றனர். தெளிவாகவே தொழில் வழங்கும் பாதைகளைக்கொண்ட பாடங்களை மையப்படுத்திக்கொண்டு நிதி வழங்குவதாக அமைந்துள்ள பல்கலைக்கழகங்களினதும் அரசாங்கத்தினதும் சமீபகாலத்து போக்குகள் பல்வகைமைகொண்ட மாணவர்களுக்கு முழுமையான ஆளுமை வளர்ச்சியை அடைவதற்கு அதிகம் உதவுவதாக இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5) அரசுப் பல்கலைக்கழகங்களைப் பாதுகாத்தல்

இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வியானது 1990கள் வரையிலும் பொதுசன அல்லது அரசுப் பல்கலைக்கழக முறைமையொன்றாகத்தான் இருந்தது. நவ தாராளமாயவாதக் கொள்கை தொடங்கியதுடன் இந்த மாதிரிக் கேள்விக்கு உட்படத் தொடங்கியது. பல்கலைக்கழகக் கல்வியை வழங்குபவர்களாக இலாப நோக்கங்களைக்கொண்ட பல்வேறுபட்ட வழங்குனர்கள் சந்தைக்குள் நுழையத்தொடங்கினர். பல்கலைக்கழகக் கல்வியானது ஒரு பொதுசன சொத்து என்ற எண்ணக்கரு கொண்டிருந்த இடத்தை பல்கலைக்கழகக் கல்வியானது சந்தைப்படுத்தக்கூடிய ஒரு தனியார் சொத்து ஆகும் என்ற எண்ணக்கரு பிடித்துக் கொண்டது. தொழில்வாய்ப்பிற்காக பயிற்சி வழங்குதல் அல்லது ஒரு மனித மூலதன முதலீடு என்றவகையில் பல்கலைக்கழகக் கல்வியிலுள்ள தனியார் நலன்கள் வலிறுத்தப்படத் தொடங்கியது. மாணவர்கள் வாடிக்கையாளர்களாகவும் அவர்களின் பெற்றோர்கள் பல்கலைக்கழகக் கல்விக்காக பணத்தைச் செலுத்துபவர்களாகவும் இருக்க விரும்புகிறார்கள் என்பது மேற்குடி சமூக வட்டங்களுக்குள் பரவலாக விவாதிக்கப்படும் விடயமாகியது. இலாப நோக்கத்தில் பல்கலைக்கழகக் கல்வியை வழங்குபவர்களின் விரிவடைதல் சமீப காலத்தில் நாட்டில் காணக்கூடியதாக உள்ளமைக்கு இந்த ஏற்றுக்கொள்ளலே பின்னணியில் உள்ளது. இந்த கல்வி முகவர் நிறுவனங்கள் பட்டம் விற்கும் கடைகளாக (degree shops) உள்ளன. அவற்றின் சில "பல்கலைக்கழக சூழலாக" ஒருவர் புரிந்துக் கொள்ளும் இடமாக இல்லாமல் அதன் செயற்பாட்டிற்கு போதுமான இடமில்லாத சூழல்களிலே அமைந்துள்ளன.

மேலே கூறப்பட்டது போலவே தற்போது கூட இலங்கையின் முழு பல்கலைக்கழகத்து மாணவர்களின் எண்ணிக்கையானது இலங்கையின் சனத்தொகையின் வீதமாகப் பார்க்கும்போது உலகத்தில் மிகவும் குறைந்த மட்டத்தைக்கொண்டதாகத்தான் உள்ளது. இந்தப் பல்கலைக்கழகங்கள் அரசு துறையில் இடமமைத்துக்கொண்டு இருக்கும் காரணத்தாலும் மேலும் இப்பல்கலைக்கழக முறைமையைச் சார்ந்த ஏனைய சில முக்கியமான மூலக்கூறுகளின் காரணமாகவும் வறிய வகுப்பைச் சார்ந்தவர்களையும் உள்ளடங்கலாக எல்லா சமூக வர்க்கங்களில் இருந்து வருகின்றவர்களையும் இப்பல்கலைக்கழகங்கள் கொண்டுள்ளன. ஆயினும் கீழ் மற்றும் மேல் நடுத்தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கங்களைச் சாரந்தவர்களும் மேல் மாகாணத்தை சார்ந்தவர்களுமே பங்கிடுதலில் ஆத்திக்க நிலையில் உள்ளார்கள். பல்கலைக்கழகப் பிரதிநிதித்துவம் சனத்தொகைக்குள் எல்லா மட்டங்களையுங்கொண்டதாக அமைந்துள்ளமைக்கான காரணிகளை கீழ் வருமாறு குறிப்பிடலாம். உயர்தர வகுப்புகளைக்கொண்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் விரிவடைதல், பலவீனங்களைக்கொண்டிருந்தாலும் இலவசக் கல்வி முறைமை நிலவுகின்றமை, கல்விப்பொதுச் சான்றிதழ் உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்டே முழுமையாக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்வாங்கிக்கொள்ளல், உள்ளூர் மொழியூடகமாகக் கல்வி கற்றவர்களே இந்தப் பரீட்சைக்கு முகங்கொடுக்க கூடியதான நிலைமை மற்றும் தனியாரால் நிதி வழங்கப்பட்ட செயல்திட்டங் களால் நிதி வழங்கப்பட்டு மேல்நிலைக்கு கொண்டுவரப்பட்ட மாணவர்களுக்கு நிதி வழங்கும் அரசு நிதி செயல் திட்டங்களின் விரிவாக்கல் என்பனவற்றை குறிப்பிடலாம். எனவே இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வியானது மேட்டுக்குடி/ பிரத்தியேகமான (elistist/exclusive) என்றும் சனரஞ்சக/உள்டக்கல் (popular/ inclusive) என்றும் இருவகை சார்ந்ததாகவும் உள்ளது. மேட்டக்குடி/ பிரத்தியேகமான என்ற அர்த்தத்தில் பார்க்கும்போது பல்கலைக்கழகம் செல்லவேண்டிய வயதிலுள்ளவர்களுள் பல்கலைக்கழக வாய்ப்பைப் பெறுகின்றவர்களின் சதவீதம் மிகவும் சிறியது. அதேநேரம் அவர்களுக்குள் மிகவும் அதிக எண்ணிக்கையானோர் சமூகத்தின் சாதாரண வறிய மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறவர்களாகவும் மிகவும் பின்தங்கிய, வளர்ச்சியடையாத பிரதேசங்களில் இருந்து வருகின்றவர்களாகவும் உள்ளார்கள் என்றவகையில் சனரஞ்சக/உள்ளடக்கல் என்றும் குறிப்பிடலாம். எனவே நாங்கள் எமது பல்கலைக்கழகக் கல்வியின்போது அடையும் சகல உள்ளடக்க்தன்மைக்கும் (inclusiveness) நாங்கள் அடிப்படையில் அரசு பல்கலைக்கழக முறைமைக்கு நன்றிகூறக் கடமைப்பட்டவர்களாக உள்ளோம். அரசத்துறைப் பல்கலைக்கழகங்களின் மாணவர்களுக்கும் பட்டங்களை விற்பனைசெய்யும் கடைகளாக குறிக்கப்படும் இலாப நோக்கத்தைக்கொண்ட வழங்குனர்களான தனியார் துறையைச் சார்ந்த மாணவர்களுக்கும் இடையில் நிலவுகின்ற பிரதேச மற்றும் குடும்ப பின்னணிகளின் முரண்டபாடான நிலைமைகளை எம்மால் அவதானிக்க முடியும். மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் என்ற விடயத்தைச் சார்ந்ததாகப் பார்க்கும்போது இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கல்தன்மையின் அபிவிருத்தியானது நாட்டின் அரசுத்துறைப் பல்கலைக்கழகங்களின் விரிவாக்கத்திலும் தர மேம்படுத்தலிலுமே தங்கியுள்ளது. பட்டங்களை வழங்கும் பொருட்டு மாணவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கும் மற்றும் முழுச் செலவுடன் கட்டணங்ளையும் அறவிடும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் அரசப் பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சமூகத்தில் பணக்கார வர்க்கத்து அபேட்சகர்களின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கைக்கே சேவையாற்று வதாக உள்ளன. குறிப்பிட்ட நிறுவனங்களால் அறவிடப்படும் கட்டணங்கள் வறிய மற்றும் நடுத்தர வருமானம் பெறுகின்ற வர்க்கங்களைச் சார்ந்தவர்களைப் பொறுத்தவரை கட்ட முடியாதவையாக இருக்கும் காரணத்தால் வறிய மற்றும் கீழ்நிலை நடுத்தர வர்க்கத்துப் பின்னணியைக்கொண்ட குடும்பங்களில் இருந்து வருகின்ற திறமையானதும் அர்ப்பணிப்புடனானதும் பிள்ளைகள் அவ்வாறு கட்டணம் செலுத்த முடியாதவர்களுள் உள்ளடக்கப்படலாம்.

கலைத்திட்டங்கள் என்ற அர்த்தத்தில் பார்த்தாலும் கூட அரசுத்துறைசார்ந்த பல்கலைக்கழகங்கள் உள்ளடக்கல் கல்விற்கு வழங்கும் சந்தர்ப்பங்கள் இலாப நோக்கத்துடன் வழங்குபவர்களால் வழங்கப்படுகின்றதை விட அதிகம். எமது பல்கலைக்கழகக் கல்வியின் தொடக்க கட்டங்களின் போது உள்ளடக்கல் சார்ந்ததாக மிகவும் உயர்ந்த நிலையிலான பட்டங்கள் வழங்கப்பட்டன. பாடத் துறையைச் சார்ந்த சிறப்பு(disciplinary specilaization) என்பது அரசப் பல்கலைக்கழகங்களில் மிகவும் பலமான நிலைமையிலுள்ளது. அத்துடன் பல பாடத்துறைகளைக்கொண்டதான பயிற்சிற்கு (multi disciplinary training) உள்ள சந்தர்ப்பமானது மிக மிகக் குறைவானது. கடந்த இரு தசாப்த காலத்தில் எண்ணிக்கையில் அதிக பெருக்கத்தைக்காட்டுகின்ற இலாபத்திற்காகப் பயிற்சியை வழங்கும் நிறுவனங்கள் கலைத்திட்டம் என்ற விடயத்தை பொறுத்தவரை உள்ளடக்கல் பல்கலைக்கழகக் கல்வியின் அபிவிருத்திற்காக எந்தவொரு பங்களிப்பையும் செய்யவில்லை. குறிப்பிட்ட நிறுவனங்களால் வழங்கப்படும் பாடநெறிகளானது வாழ்கைத்தொழில் அல்லது தொழிலின் மீது தங்கியுள்ளதும் சந்தையின் கிராக்கிக்கு ஏற்புடையதுமான பயிற்சிச் சந்தர்ப்பங்களே வழங்கப்படுகின்றன. இந்த நிறுவனங்களில் பெரும்பாலானவை வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்து பட்டங்களுக்காகவோ அல்லது டிப்புளோமா சான்றிதழ்களுக்காகவோ கற்பித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபாரத்தை மேற்கொள்ளும் நிறுவனங்கள் ஆகும். எனவே குறிப்பிட்ட பாடப் பரப்புகளுக்குள் அகன்ற பார்வைக்கொண்டதாக தங்களுடைய பாடநெறிகளை அபிவிருத்தி செய்யும் அதிகாரமோ, திறமையோ அல்லது ஆர்வமோ குறிப்பிட்ட நிறுவனங்களிடம் கிடையாது.

உள்ளடக்கல் பல்கலைலக்கழகக் கல்வியின் தன்மையானது அதன் இரட்டைத்தன்மையான பார்வைகளின்படி (dual aspects) மதிக்கக்கூடி யாதாக உள்ளது. இலங்கையில் நிலவும் நிறுவன கட்டமைப்புச் சூழ்நிலையில் பல்கலைக்கழகக் கல்வியின் அவ்வாறானதொரு உள்ளடக்கல்தன்மையின் வளர்ச்சியானது அரசப் பல்கலைகக்கழக பொறிமுறையின் ஊடாக மட்டுமே சாத்தியமாககூடியதொன்றாகும். இது எதிர்காலத்திற் கூட எதிர்பார்க்கக்கூடிய நிலைமையாகத் தான் உள்ளது. தனியார் பல்கலைக்கழகங்கள் நாட்டில் இன்னமும் முழுமையாகவே அபிவிருத்தியடைந்த நிலையில் இல்லை. அதேநேரம் அவ்வாறான பல்கலைக்கழகமொன்றை கிட்டிய எதிர்காலத்தில் அபிவிருத்திச் செய்யக்கூடியதான திட்டம் சார்ந்த சான்றுகளும் காணக்கூடியதாக இல்லை. அரசுப் பல்கலைக் கழகங்களில் தனியார் துறை வளங்களின் பயன்பாடு சார்ந்த வளர்ச்சிகளையே கடந்த காலங்களில் இருந்து காணக்கூடியதாக உள்ளன. இனி வருங்காலங்களில் இந்த அரசு–தனியார் துறைகளின் பங்களிப்பு மேலும் வளர்ச்சியடையும். இந்த எல்லாவற்றினையும் அரசுப் பல்கலைக்கழக கட்டமைப்பை பாதுகாக்க, பராமரிக்கப்பட, விரிவுப்படுத்தப்பட மற்றும் விருத்தி செய்யவேண்டிய தேவையை காட்டுகின்ற சமிக்ஞைகளாகும். சமநிலையானதும் நியாயமானதுமான எண்ணக்கருக்களைக்கொண்டதாக சமூக சனநாயக பார்வையை வலுவூட்டுவதாக இல்லாமலோ, மனித திறன்களை அபிவிருத்தி செய்வதன் மீது பரந்தளவிலான அர்ப்பணிப்பைக்கொண்ட பொருளாதார முறைமையின் அடித்தளமொன்று இல்லாமலோ அரசுப் பல்கலைக்கழகத்துறைக்கு ஒரு வலுவான முறைமைக்கொண்ட அபிவிருத்தியை அடைய முடியாது. அரசுப் பல்கலைக்கழகங்களின் சமூக பொறுப்பு (social commitment) பலவீனமடையும்போது அரசுப் பல்கலைக்கழகங்களில் வேலைசெய்வோர் ஒழுக்கச்சிதைவுக்கு உட்படுவார்கள். அது படிப்படியாக அவர்களுடைய ஆற்றுகையின் மீது பிரதிகூலமான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக திட்டமிடப்பட்டதும், நன்றாக நிதி வழங்கப்பட்டதுமான அரசுத்துறை உயர் கல்வியால் வெறும் பட்டதாரிகள் அல்லது டிப்புளோமாதாரிகள் என்ற நிலையை தாண்டியவர்களை உற்பத்திசெய்ய முடியும். அது மாணவர்களை கடமைப்பொறுப்புகளைக்கொண்ட பிரசைகளைக்குதல், எதிர்பார்ப்புகள் போஷிக்கப்படுதல், தெரிந்துகொள்வதில் பேரார்வங் கொண்டிருத்தல், தன்நம்பிக்கைகொள்ளல், சிரத்தைகொள்ளல் மற்றும் ஜாக்கிரதை என்ற பண்புகளை மாணவர்களிடம் வளரச் செய்கின்றது. அதேபோல கல்விச் சமூகத்தின் ஒழுங்கையும் சுதந்திரத்தையும் பாதுகாக்க பங்களிப்புசெய்கின்றது. பல்கலைக்கழகக் கல்வியானது உயர் வருமானம் பெறுகின்ற வர்களுக்கு மட்டுமே ஆகும் என்று மட்டுப்படுத்தப்படுவதாக அமைந்தால் வர்க்கச் சமூகத்தின் அசிங்கமான முகம் சமூகத்தின் ஏனையவர்களால் ஒழுங்கமைக்கப்படும் கலக சாத்தியபாடுகளுடன் சமூகத்தில் தோன்றும். ஒரு முழுமையான பயிற்சியுடன் உருவாக்கப்படும் பட்டதாரிகளின் பெறுமதியானது எதிர்காலத்து வருமானங்களின் அளவுகோல்களால் ஒருபோதும் முழுமையாக அளவிடப்பட முடியாது. சூழல் முறைமையின் பெறுமதி போலவே மனித திறமைகளின் பெறுமதியும் சந்தையின் அளவுகோலைக் கடந்து செல்கின்றது. கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக காப்புறுதி என்பனவற்றின் மீதான அரசின் சமூகச் செலவுகள் பல தலைமுறை களுக்காகவே உள்ளன என்பதுடன் தற்போதைய தலைமுறையைத் தாண்டிச்சென்று பல தலைமுறைகளுக்குப் பெருகும் சமூகப் பெறுமதியைக் அது கொண்டுள்ளது.

கடந்த சில காலமாக நாட்டில் வளர்ச்சியடைந்துள்ள சில நிலைமைகளை அவதானிக்கும்போது இலாப நோக்கத்துடன் கல்வியை வழங்குபவர்களும் எதிர்காலத்தில் வரக்கூடிய தனியார் துறை பல்கலைக்கழகங்களும் நாட்டின் உயர் கல்வி முறைமையில் முக்கியமான இடத்தை பிடித்துக்கொள்ளக்கூடியதாகத்தான் உள்ளது. ஆயினும் நாட்டின் ஒட்டுமொத்த சமூக–பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுத்துச்செல்லத் தேவையான மனித வள அபிவிருத்தியின் பிரதான வகிபங்கு அரசப் பல்கலை கழகங்களுக்கே உண்டு. தற்போதைய அபிவிருத்தி மட்டத்தில் இலங்கை ஒரு "நடுத்தர வருமானமுள்ள" நாடாக உள்ளதே இலங்கையின் ஒப்பியல் அனுகூலம் ஆகும். இலங்கைக்கு இனிமேல் சீதோஷ்ண நிலைமையிலோ, புவியியலிலோ அல்லது மலிவான உழைப்பிலோ தங்கிருக்க முடியாது. அது மனித அறிவு மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபுணத்துவம் என்பதிலே தங்கியிருக்கவேண்டிய நிலையில் உளளது. இலங்கையை ஓர் உலக அறிவு மையமாக அபிவிருத்திச் செய்வதாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கொள்கையில் இந்த கருத்து தெளிவாக உள்ளடக்கின்றது. சனத்தொகையில் இளைஞர் யுவதிகளின் வளர்ச்சியடையும் வீதத்திற்கு ஏற்புடையதாக உயர் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளின் கதவுகள் திறக்கப்படுவதன் முக்கியத்துவம் இந்த எல்லாவற்றினாலும் அழுத்தமாகச் சொல்லப்படும் விடயம் ஆகும்.

உயர் தரத்தைக்கொண்ட மனித வள வலுப்படுத்தலுக்கான தலைமைத்துவத்தையும் ஒரு சுபீட்சமான அறிவு பொருளாதார அத்திவாரத்தையும் பலப்படுத்துதற்கான தலைமைத்துவம் அத்தியாவசியமாகவே நாட்டின் பல்கலைககழகங்களால் தான் வழங்கப்பட வேண்டும். "மனித வள தடைதாண்டுதல்" (human resource reapfrogging) என்று அழைக்கப்படும் ஒரு செயல்பாடுத் தொடர்பாக தற்போது பரவலாக பேசப்படுகிறது. இலாப நோக்கத்தைக்கொண்ட தனியார் துறை வழங்குபவர்கள் கூட தங்களுடைய இடத்தை கைப்பற்றிக்கொண்டிருக்கும் நிலையில் நிலவும் கட்டமைப்பிற்குள் அத்தியாவசியமான பயிற்சியின் தலைமைத்துவ வகிப்பாகத்தை அரசுப் பல்கலைக்கழகங்களிடம் ஒப்படைத்தல் அத்தியாவசியமானது. பல்கலைக்கழகங்களும் அவற்றினை மேற்பார்வை செய்கின்ற முகவர்களும் என்ற இருசாராரும் அரசு-தனியார்துறை கூட்டு ஈடுபாட்டை பற்றியும் கூட்டிணைந்த முயற்சிகளை பற்றியும் விழிப்புணர்ச்சியைக் கொண்டவர்களாக இருத்தல் அவசியம். தற்போது எல்லா பல்கலைக்கழகத்திலும் திட்டங்கள் "உலகத் தரம்" என்ற நிலையை அடைவதை இலக்காகக்கொண்டுள்ளது போல தெரிகிறது. எவ்வாறு பொருள்விளக்கம் செய்யப்படுவதாக இருந்தாலும் உலகத்தரத்திலான பல்கலைக்கழகமானது (1) திறமைகளை பற்றிய உயர் கரிசனைகொண்டதாகவும் (2) போதுமான வளங்களைக்கொண்டதாகவும் (3) அனுகூலமான ஆளுங் கட்டமைப்புகளைக்கொண்டதுமாகவும் இருத்தல் அவசியம். மேலே கூறப்பட்டது போன்று அரசு-தனியார் என்ற துறைகளின் பங்குக்கொள்ளலுடன் அவ்வாறான உலகத் தரத்திலான அந்தஸ்துகளை அடைவதற்கு மேற்கொள்ளும் முயற்சியின் போது சிலவகையான போட்டிகளும் பல்கலைக்கழகங்களுக்கிடையில் இடம்பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தலிலும் ஆய்வுகளினதும் பல்வகைமைக்கொண்ட தகுந்த தரமான பட்டங்களே இந்தப் பல்கலைக்கழகங்களிடம் மக்கள் எதிர்பார்ப்பார்க்கிறார்கள். எனவே மாணவர்களுக்கு தகுந்தளவு பரப்பெல்லையை கொண்ட பாடத் தெரிவுகளை மேற்கொள்ளக்கூடிய சந்தர்பங்கள் இந்த பல்கலைக்கழகங்கள் வழங்க வேண்டும். பல்வேறு பல்கலைக்கழகங்களின் தரத்தைப் பற்றிய தீர்ப்பை மனித வள அபிவிருத்திச் செயற்பாட்டின் இயக்கவிதியை (dynamism) சார்ந்த அறிவுசார் பல்வகைமையால் வழங்கப்படும். இது பல்கலைக்கழகளுக்கிடையிலான போட்டி ஏற்படும் இடமாகும். ஒரேவகையான பாடநெறிகளை வழங்குகின்ற, ஒரேவகையான பட்டங்களுக்கோ அல்லது டிப்புளோமாக்களுக்கோ வழிகாட்டுவதாக உள்ள பல்கலைக்கழகங்களின் தொகுதியொன்று நிலவுவதை மக்கள் விரும்பமாட்டார்கள். ஆயினும் கடந்த சில தசாப்த காலமாக இலங்கைப் பல்கலைக்கழகங்கள் அடைந்த மிக விரைவான வளர்ச்சியின் போது தனித்த ஒன்று அல்லது இரண்டு பரீட்சார்த்த முயற்சிகளை மட்டுமே மேற்கொள்ளப்பட்டதாக உள்ளது என்பது துரதிஷ்டமாகும். இந்நாட்டில் பல்கலைக்கழகங்களின் அவ்வாறானதொரு உயர்தர இயக்க சக்தியைக்கொண்ட முறைமையின் அபிவிருத்திக்காக நிலையான அரசு நிதி வழங்குதலும் மாறிக்கொண்டுவரும் தேவைகளுக்கு ஏற்ப உள்வாங்கிக்கொள்ளலின் அதிகரிப்பும் அத்தியாவசியமாகவே தேவை.

இவற்றிற்கு மேலதிகமான இரு பண்புகளும் ஒரு பலமுள்ள அரசு பல்கலைக்கழகத்திற்கு இன்றியமையாதவையாக உள்ளன என்பதை வலியுறுத்தல் அத்தியாவசியமானது. (1) நிறுவன சுயாதிபத்தியம் (2) புலமைசார் சுதந்திரம் எனபன இப்பண்புகள் ஆகும். பிரித்தானியப் புலமையாளர் பாரம்பரியத்தின் செல்வாக்குகள் காரணமாக இலங்கைப் பல்கலைக்கழகம் அதன் தொடக்கத்தில் இந்த நிர்வாகப் பண்புகளை அவற்றின் அதிகூடிய சாத்தியப்பாடுகளுடன் அனுபவித்தது. குறிப்பிட காலத்தில் பல்கலைக்கழகத்து சிரேஸ்ட ஆசிரியர்களின் கூட்டமும் பல்கலைக்கழக முகாமைத்துவத்தை மேற்கொண்டவர்களும் மேட்டுக்குடி வர்க்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். 1950களின் இறுதிவரை பல்கலைக்கழக மாணவர்கள் கூட இந்த மேட்டுக்குடி அமைப்பைச் சார்ந்தவர்களாகத்தான் இருந்தார்கள். அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் நாட்டினுடைய உயர்நிலை மேட்டுக்குடி சந்ததிகளின் பிள்ளைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார்கள். எனவே இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவன ரீதியான சுயாதிபத்தியத்தையும் புலமைசார் சுதந்திரத்தையும் மிகவும் உயர்ந்த மட்டத்தில் அனுபவித்தமையானது வியப்பிற்குரியதொன்றல்ல. எவ்வாறாயினும் 1960களில் சுயமொழியூடக கற்பித்தல் தொடங்கியதுடன் இந்த நிலைமைகள் மாறின. மத்திய மகா வித்தியாலயங்களில் இருந்தும், நாட்டின் விளிம்பு பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் இருந்தும் கீழ்நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்களின் பல்கலைக்கழக நுழைவு எண்ணிக்கை அதிகரித்தது. இது ஒட்டுமொத்த மாணவர் தொகையை அதிகரிக்கச் செய்தது. அரசு உரிமைத்துவத்தைக்கொண்ட உற்பத்தித்துறை தொழில்முயற்சிகளில் நடந்தது போலவே பல்கலைக்கழகங்களிலும் நிறுவன ரீதியான சுயாதிபத்தியம் படிப்படியாக தேய்நிலையடைந்தது. அத்துடன் பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் மீதான அரசியல் தலையீடுகள் படிப்படியாக வளர்ச்சியடைந்தன. பல்கலைக்கழகங்களைப் போன்ற அரசத்துறை நிறுவனங்களின் அபிவிருத்திக்கு ஒருவகையில் உரிமைத்துவத்தையும் ஒட்டுமொத்தக் கொள்கை கட்டுபாட்டையும் வழங்கும் ஒரு முறைமை ஒருபுறத்திலும் அன்றாட நிர்வாகமும் முகாமைத்து வமும் மேற்கொள்வதற்கு விதிமுறைகளையும் பொறுப்புக் கூறல்களையும் கொண்டதான முறைமையை மறுபுறத்திலும் கொண்டுவருவது அவசியம். அவ்வாறான பொருத்தமானதும், பலனுள்ளதுமான முறைமைகளைக்கொண்டுவர எமது அரசுதுறை அதிகாரத்துவங்கள் மிகவும் நீண்டகாலம் எடுப்பார்கள் போலத் தெரிகிறது.

எவ்வாறாயினும் பல்கலைக்கழகங்களின் புலமைசார் சுதந்திரம் என்பது புலமைசார் சமுதாயம் கற்றல், கற்பித்தல் மற்றும் ஆய்வுகள் ஆகிய செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபடக்கூடிய அதிகாரத்தைக்கொண்டிருத்தலுடன் தொடர்புடையதாக உள்ளது. எனவே வழங்கப்படும் நிதி வெட்டப்படுதல் காரணமாக ஏற்படும் பிரதிகூலமான விளைவுகள் புலமைசார் சுதந்திரத்தை பறிக்கும். பல்கலைக்கழகப் பட்டதாரிகளின் தொழில் இல்லாத நிலைமையின் அதிகரிப்பானது அரசியல் தலைமைத்துவத்தின் மீது அழுத்தம் கொடுக்கும் செயற்பாட்டிற்கான நிலைமையை உருவாக்குகிறது. அது தவிர்க்க முடியாதது. ஆயினும் பல்கலைக்கழகத்து கல்விசார் நிகழ்ச்சிகளை சீர்திருத்தவும், நவீனமயப்படுத்தவும் மற்றும் பல்வகைமையாக்கவும் புலமைசார் சமுதாயத்தின் மீது மேற்கொள்ளப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்புற சமூக –அரசியல் அழுத்தங்களை விரும்பத்தகுந்த அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளல் வேண்டும்.

இலங்கையில் அரசுப் பல்கலைக்கழகங்கள் உயர் படிப்பு சார்ந்ததாக ஒரு கலப்பான நிறுவன கட்டமைப்பைக்கொண்ட சூழலில் வேலை செய்யும் காலம் வரும். மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்களின் வித்தியாசமான குழுக்களைச் சார்ந்த மாணவர்க ளுக்குள் நிலவும் போட்டியின் மாதிரி தொடர்பாக விரிவானதும் திரளானதும் தரவுகள் கிடைக்கக்கூடியதாக இல்லை. ஆயினும் முகாமைத்துவம் மற்றும் தகவல்தொழில் நுட்பம் போன்ற தெரிவுசெய்யப்பட்ட சில பாடங்களைச் சார்ந்ததாக அரசு பல்கலைக்கழகங்களுக்கும் இலாப நோக்கத்துடன் கல்வியை வழங்கும் தனியார் துறையினருக்கும் இடையில் நல்ல மாணவர்களுக்கான போட்டி நிலவுகின்றன என்பதற்கு நுண்ணுணர்வான சான்றுகள் உள்ளன. எவ்வாறாயினும் அரசுப் பல்கலைக்கழகங்கள் கா.பொ.த.(உ.த.)பரீட்சையின் எல்லாப் பாடங்களிலும் உயர் வரிசையிலுள்ள மாணவர்களைத் தொடர்ச்சியாக உள்வாங்கிக்கொள்ளல் வேண்டும். வெளிநாட்டு பட்டங்களை வழங்கும் நிறுவனங்களின் பட்டதாரிகள் உள்நாட்டு தொழில் சந்தையில் அரசுப் பல்கலைக்கழகத்து பட்டதாரிகளுக்கு கடும் அச்சுறுத்தலாக அமையலாம். இலாப நோக்கத்தைக்கொண்ட வழங்குநர்கள் வழங்கும் பட்டங்களினதும் டிப்புளோமாக்களினதும் தரம் மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கநிலை பற்றி கவனத்தில் கொள்ளாமல் சந்தைப்படுத்தல், விளம்பரப்படுத்தல் போன்ற அதிகமான செலவுகளைக்கொண்ட அந்த நிறுவனங்களுடன் இணைந்துள்ள வெளிநாட்டுப் பல்கலைக்கழக்களுக்கான அதிகமான கட்டணங்களையும் சேர்த்து மிகவும் உச்சக்கட்ட செலவுகளுடன் இயங்கும்போது கூட அதிக எண்ணிக்கையான மாணவர்களைக் கவர்கின்றதாக அவை காணப்படுகின்றன. எண்ணிக்கையில் சிறியதும் குறைந்த தகைமைகளைக் கொண்டதுமான பணிக்குழுவின் வழியாக இந்த நிறுவனங்கள் பெரும்பாலும் செலவுகளைச் சரிபடுத்திக்கொள்கின்றன. மாணவர்களுக்கு ஒரு வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்துப் பட்டத்தை அல்லது டிப்புளோமாவை வழங்குகின்றதிலும், பயிற்சியானது ஆங்கில மொழி ஊடாகவே மேற்கொள்ளப் படுகின்றதொன்றாகும் என்பதிலும் அந்த நிறுவனங்களின் கவர்ச்சிகரமானதன்மை தங்கியுள்ளது. அவர்களுக்கான திறந்த தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புகள் உலக மட்டத்திலும் உள்ளன என்று கூறுகின்றன. இந்தத் தனியார் பல்கலைக்கழகம் அதாவது பட்டங்களை விற்பனைசெய்யும் கடைகள் என்பது உள்ளூர் அரசுப் பல்கலைக்கழகப் பீடங்களுக்கு செல்வந்த மற்றும் மேல் நடுத்தர வர்க்கத்து மாணவர்கள் சேர்ந்தல் சார்ந்ததாக பார்க்கும்போது ஒரு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாகத்தான் உள்ளன. அரசுப் பல்கலைக்கழகங்கள் இந்த அச்சுறுத்தல்களைப் பற்றிய விழிப்புணர்வுடன் சில தகுந்த நடவடிக்கைகள் எடுப்பது அவசியம். இந்த தகுந்த நடவடிக்கைகளின் பலன்களை இனிவரும் காலங்களில் பார்க்கலாம்.

தனியார் மற்றும் பொது நலன்களை உருவாக்குவதற்கு அரசு நிதிகளை அதிகமாகப் பெறுவதில் அரசுத்துறைப் பல்கலைக்கழகங்கள் ஒரு பலமான அடிப்படைக்காரணத்தைக் கொண்டுள்ளன. பன்முகப்படுத்தப்பட்ட மூலங்களில் இருந்து போதிய நிதி வளங்களை அரசப் பல்கலைக்கழகங்கள் கோரி நிற்கின்றன. தன்னுடைய வகிபாகமாகவுள்ள மனித வள அபிவிருத்தியுடன் சமூக அசைவியக்கத்திற்காகவும், அத்துடன் சமூக சமநிகரற்றதன்மையை இல்லாமல் செய்ய பங்களிப்பை வழங்கும் வழியாக சமூகப் பணியை மேற்கொள்ளவும் வரவு செலவுத் திட்டத்தால் வழங்கப்படும் மானியங்களைப் போலவே தன்னுடைய சொந்த சம்பாதித்தல்களையும், தனியார் நன்கொடைகளையும் சிலநேரம் மாணவர்களிடம் இருந்து சில கட்டணங்களையும் கூட தேவைப்படும். அரசு உயர்கல்வி என்பது தலைமுறைகளுக் கிடையேயான ஒரு உடன்பாடு ஆகும். அதாவது வயதுவந்த தலைமுறையினர் வரிப்பணம் செலுத்துதலின் வழியாக எதிர்காலத்து தலைமுறையினருடைய நலனுக்காக முதலீடு செய்கிறார்கள்.

## 6) பல்கலைக்கழகங்களுக்கு வியாபார மாதிரியா?

பல்கலைக்கழகம் என்பது இன்னொரு வியாபார அலகாக கருதி செயல்படுவதில் சில பாரதூரமான பிரச்சினைகள் உள்ளன. பல்கலைக்கழகத்தை ஒரு வியாபார நிறுவனமாக்க வேண்டும் என்று கருதுபவர்களை பொறுத்தவரை மாணவர்கள் அதன் வாடிக்கையாளர்கள் அல்லது நுகர்வோர்கள் ஆவார்கள். இந்த நுகர்வோர்கள் எவ்வாறாயினும் தங்களுடைய சொந்தத் திறைமைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மதிப்பிடுதலையே கொள்வனவுசெய்கிறர்கள். அவர்கள் கொள்வனவு செய்கின்ற பட்டத்திற்காகவோ அல்லது டிப்புளோமாவிற்காகவோ அவர்கள் தங்களுடைய சொந்த திறைமைகளையும் சாமார்த்தியங்களையும் பயன்படுத்திக்கொண்டு பெரும் பங்களிப்பை வழங்கியே "வாடிக்கையாளர்களாக" செயல்படுகிறார்கள். ஒரு சாதாரண வியாபாரத்தின் போது ஒருவர் தன்னுடைய எந்தொரு சொந்த ஈடுபாடும் இல்லாதவாறு உற்பத்தி செய்யப்பட்ட ஒரு பொருளை தான் விலைகொடுத்து கொள்வனவு செய்கிறார். பல்கலைக்கழகப் பட்டத்தை அல்லது டிப்புளோமாவை சார்ந்ததாகவும் அதே கோட்பாடு பிரயோகிக்கப்படுவதாக இருந்தால் "மாணவர் வாடிக்கையாளர்" ஒரு பணத்தொகையை மட்டுமே செலுத்துபவராக இருந்தால் அவர் கொள்வனவு செய்துகொண்ட பொருளுக்கு நம்பக்கூடியதன்மை கிடையாது. எனவே கல்வியிலும் ஏனைய வியாபாரங்களில் போலவே தீய/ஒழுக்கங்கெட்ட நடத்தையில் ஈடுபடுவதற்கான பெரும் தூண்டுதலை உருவாக்கும். பல எண்ணிக்கையான மக்களுக்குப் பாதிப்பை எற்படுத்தும் வகையானதும் எல்லோருக்கும் பெரும் பணத்தைச் செலவுசெய்யவைக்கின்றதாகவும் இந்தத் தீய நடத்தை அமையும். ஒரு பல்கலைக்கழகத்தில் தங்களுக்கு கல்வி வழங்குவதற்கான செலவீனத்தின் பகுதியை மாணவர்கள் கட்டணமாக செலுத்தல் என்பது தீங்கானதொன்றல்ல. தங்களுடைய குடும்ப நிதியில் இருந்தோ அல்லது கடனாகப் பெறப்பட்ட நிதியில் இருந்தோ அவர்களால் செலுத்தக்கூடிய சாத்தியப்பாட்டை அறிந்துகொண்டு மாணவர்களிடம் இருந்து அந்தப்பகுதியை அறவிடலாம். முழுச் செலவையும் அத்துடன் கட்டணங்களையும் மாணவர்கள் செலுத்த வேண்டும் என்ற நிலைமை உருவாகும் போதுதான் எதிர்ப்புக் இந்தநுகர்வோர்கள் எவ்வாறாயினும் தங்களுடைய சொந்த திறைமைகளின் ஒரு மதிப்பிடுதலையும் ஒரு பகுதியாக கொள்வனவுசெய்கிறர்கள். அவர்கள் கொள்வனவு செய்கின்றதை பட்டத்திற்காகவோ அல்லது டிப்புளோமாவிற்காகவோ அவர்கள் தங்களுடைய சொந்த திறைமைகளையும் சாத்தியங்களையும் பயன்படுத்திக்கொண்டு பெரும் பங்களிப்பை செலுத்தியே "வாடிக்கையாளர்களாக" செயல்படுகிறார்கள். ஒரு சாதாரண வியாபாரத்தின் போது ஒருவர் தன்னுடைய சொந்த எந்தொரு ஈடுபாடும் இல்லாதவாறு உற்பத்தி செய்யப்பட்ட ஒரு பொருளை தான் விலைகொடுத்து கொள்வனவு செய்கிறார். பல்கலைக்கழகப் பட்டத்தை அல்லது டிப்புளோமாவை சார்ந்ததாகவும் அதே கோட்பாட்டை பிரயோகிக்கப்படுவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தால் "மாணவர் வாடிக்கையாளர்" ஒரு பணத்தொகையை மட்டுமே செலுத்துவதாக இருந்தால் அவர் கொள்வனவு செய்துக் கொண்ட பொருளுக்கு நம்பக்கூடியத்தன்மை கிடையாது. எனவே கல்வியானது ஏனைய வியாபாரங்கள் போலவே தீய/ஒழுக்கங்கெட்ட நடத்தையில் ஈடுபடுவதற்கான பெரும் துண்டுதலை உருவாக்கும். பல எண்ணிக்கையான மக்களுக்கு பாதிப்பை எற்படுத்தும் வகையானதும் எல்லோருக்கும் பெரும் பணத்தை செலவுசெய்யவைக்கின்றதாகவும் இந்த தீய நடத்தை அமையும். ஒரு பல்கலைக்கழகத்தில் தங்களுக்கு கல்வி வழங்குவதற்கான செலவினத்தின் பகுதியை மாணவர்கள் கட்டணமாக செலுத்தல் என்பது தீங்கானதொன்றல்ல. தங்களுடைய குடும்ப நிதியில் இருந்தோ அல்லது கடனாகப் பெறப்பட்ட நிதியில் இருந்தோ அவர்களால் செலுத்தக்கூடிய சாத்தியப்பாட்டை அறிந்துக்கொண்டு மாணவர்களிடம் அந்தப்பகுதியை கேட்கப்படலாம். முழு செலவையும் அத்துடன் கட்டணங்களையும் மாணவர்கள் செலுத்தல் வேண்டும் என்ற நிலைமை உருவாகும் போது தான் கிளம்புகின்றது. அப்போது வழங்கும் கல்விப் பயிற்சியானது இலாபத்தைச் சம்பாதித்துக்கொள்ளும் வியாபாரமாகலாம்.

அரசுப் பல்கலைக்கழகங்களில் தொழில் செய்வோர்களை எவ்வாறு ஊக்குவிக்கலாம் என்ற விடயத்தைச் சார்ந்ததாகவும் பிரச்சினைகள் உள்ளன. பணத்தை தூண்டுசக்தியாக பயன்படுத்திக்கொள்ளலாம் என்பது பற்றி சந்தேகம் கிடையாது. இருந்தாலும் இன்னும் சில ஊக்குவிப்பு காரணிகளும் உள்ளன. எமக்குத் தெரிந்த வரலாறு முழுவதிலும் இதனைவிட அதிகமாகச் சம்பளம் கிடைக்கின்ற தொழில்களில் இணைத்துக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் இருந்த பொழுதிலும் அவற்றினை விட்டு பல்கலைக்கழக ஆசிரியர்களாகியவர்கள் இருந்துள்ளார்கள். பணம் சம்பந்தப்பட்ட அர்த்தத்தில் மனித ஊக்குவிக்கப்படுதலின் மூலங்கள் பார்க்கும் நடைமுறை பிரதான நிலைப் பொருளியல் போன்ற சில பாடங்கள் கொண்டுள்ளன. தாங்கள் என்ன செய்கிறார்கள் என்பதை பற்றியும் எவ்வாறு அதை செய்ய முடியும் என்பதை பற்றியும் மக்கள் அக்கறைகொள்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். பரஸ்பர பரிமாற்றிக்கொள்ளல் மற்றும் நியாயமானத்தன்மை சார்ந்த பிரமாணங்கள் ஒரு முயற்சியின் வெற்றியின் மீது பெரும் தாக்கத்தை செலுத்துகின்றவையாக உள்ளன. அரசுக் கல்வியானது ஆசிரியர்களை போதியளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவிக்கப்படுகின்றதொன்றாக இல்லை என்ற விமர்சனம் நிலவுகிறது என்பது உண்மையானது. எவ்வாறாயினும் தனிநபர்மயமாக்கப்பட்ட ஊக்குவிக்கப்படுதலானது ஒத்துழைப்பையும் கூட்டுப் பணியாற்றலையும் பலவீனப் படுத்துவதாக அமையலாம். ஓரளவுக்குப் போட்டிகள் இருப்பது நல்லதுதான் என்றாலும் அதிகூடிய போட்டியானது மக்களிடம் உள்ள கூடாதவை வெளியில் கொண்டுவருவதாக அமையலாம்.

வியாபார மாதிரியை சார்ந்த பலவீனங்கள் இன்னும் பல உள்ளன. ஒரு உற்பத்தி நிறுவனம் அதன் உள்ளீடுகளை (inputs) அவற்றின் தரத்தை பற்றி கவனம்செலுத்தி தெரிவுசெய்துக்கொள்ளலாம். சிறந்ததை மட்டுமே தெரிவுச் செய்துக்கொள்ளும்பட்சத்தில் இறுதி உற்பத்தியின் தரம் சிறப்பானதாக அமையும். ஆயினும் ஆகக்குறைந்த தகைமைகளுடன் நுழைதலுக்காக விண்ணப்பிக்கும் மாணவர்களுள் சிறந்தவர்களை மட்டுமே தெரிவுசெய்துகொண்டு ஏனையவர்களை நிராகரித்தல் என்பதை பல்கலைக்கழகத்தால் செய்ய முடியாது. நான் இங்கு ஒரு அரசு பல்கலைக்கழகத்தில் ஒரு துறையை முகாமைத்துவம் செய்த போது சிறப்பு பட்டத்திற்காக விண்ணப்பிக்கின்ற மாணவர்களுள் சிறந்தவர்களை மட்டுமே தெரிவு செய்துக்கொள்ள வேண்டிய நிலை இருந்தது. இருந்த தடைகள் காரணமாக சிறப்பு பட்டத்தின் தரத்தை மேண்படுத்துவதற்காக நான் எப்பொழுதும் கடினமான நிலைமைகளுடன் போராடினேன்.

பல்கலைக்கழகங்களுக்காக வியாபார மாதிரியைப் பிரயோகிக்கும் போது இன்னும் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. செலவுகளை குறைத்துக்கொள்ளும்பொருட்டு நிரந்தர ஆசிரியர்களை பயன்படுத்திக்கொள்வதை நிறுத்தி பகுதிநேர ஆசிரியர்களை பயன்படுத்திக்கொள்வதை அதிகரித்தல் ஒரு முக்கியமான வழியாக சிபார்சு செய்யலாம். இலாபத்திற்காக இயங்கும் "பட்டங்களை விற்பனை செய்யும் கடைகள்" இதைதான் செய்துகொண்டுள்ளன. அவர்கள் இந்த நாட்டில் பயன்படுத்தும் பகுதிநேர ஆசிரியர்களுள் அரசுத்துறைப் பல்கலைக்கழகங்களைச் சார்ந்த ஆசிரியர்கள் மிகவும் குறைவு. எவ்வாறாயினும் உயர்தரத்திலான கல்வியை வழங்கும் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் பெரும்பாலான பீட அங்கத்தவர்கள் நிரந்தர பதவிகளில் உள்ளவர்கள் ஆவார்கள். கூட்டு உற்பத்திக்காக பங்களிப்பு செய்யும் தூண்டுதல்களுடன் ஒரு பல்கலைக்கழகத்துறையில் கற்பித்தல் தரத்தை அபிவிருத்தி செய்வதற்கு காலமும் அர்ப்பணிப்பும் தேவையாக உள்ளன. (என்னுடைய தனிப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவங்களின்படி குறைந்தப்பட்சம் பத்து வருடங்களாவது அவசியம்). சம்பளச்சீட்டை அடிப்படையாகக்கொண்டு ஊழியர்களின் உற்பத்தித்திறனை வலுப்படுத்தலைக் கூட வியாபார மாதிரி சிபார்சு செய்கின்றது. பல்கலைக்கழகத்தில் இது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது. தற்போதைய நாட்களில் மாணவர்களும் சகபாடிகளும் (peers) கற்பித்தல் மதிப்பிடுதலில் அதிக ஈடுபாட்டைக்கொண்டுள்ளார்கள். ஆயினும் இந்த மதிப்பிடுதல்களில் அளவுக்கோல்கள் மற்றும் கணக்கிடுதல் சார்ந்ததுமான பல பிரச்சினைகள் உள்ளன. இந்த மதிப்பிடுதல்கள் பிரயோசனமான தகவல்களை வழங்குகின்றன என்பது பற்றிச் சந்தேகம் கிடையாது. தேடல்களின் வழியதாகத் தரம் அளவிடப்படும் என்ற அழுத்தம் இருந்தாலும் இல்லாவிடிலும் நல்ல ஆசிரியர்கள் தங்களால் செய்யப்படுவதை சார்ந்த தர மதிப்பிடுதலைக்கொண்டுள்ளார்கள். அவ்வாறான தேடல்களின் வழியாக கிடைக்கப்பெறுகின்ற தகவல்களானது பிரயோசனமானதாக இருந்தாலும் அவை மட்டுப்படுத்தப்பட்டவையாகவோ சிலநேரம் தவறான வழிகாட்டல்களைக் கொண்டவையாகவோ அமையும். கற்பித்தல் தரத்தைத் தவிர மாணவர்களின் சிந்தனையின் மீது செல்வாக்கை செலுத்தும் வித்தியாசமான காரணிகளைப்பற்றி ஆசிரியர்கள் அறிவார்கள். மாணவர்களால் நிரப்பப்படும் கேள்விக்கொத்துக்களின் வழியாக மிகவும் எளிதாக நல்ல ஆசிரியர்களை தெரிவுச் செய்தல் என்பது மிகவும் கடினமானது. கற்பித்தல் என்பது சனரஞ்சகமடைவதற்கானதொரு போட்டியிடுதல் அல்ல.

இந்த சந்தர்ப்பத்தில் நான் நன்ஸி வோல்ப்றேயின் (Nany Folbre) "*அரசுப் பல்கலைக்கழகங்களை பாதுகாத்தல்– ஏன் நாங்கள் அரசு உயர் கல்வியை உறுதியாக்கிக்கொள்ளல் வேண்டும்*" என்பதில் வரும் ஒரு பகுதியை (பக்கம் 120) மேற்கோள்காட்டி இந்தப் பகுதியை முடிவுக்கு கொண்டுவருவேன். "வெற்றியடைந்த வியாபாரங்களில் இருந்து பல்கலைக்கழகங்கள் சில முக்கியமான பாடங்களைப் படிக்கலாம். குறுகியகால இலாபமானது எப்பொழுதும் நீண்டகால வெற்றிக்கு வழிகாட்டுவதில்லை. வித்தியாசமான வியாபாரங்கள் வித்தியாசமான மாதிரிகளைக் கோரிநிற்கின்றன. தர முகாமைத்துவமானது கூட்டுப் பணியாற்றலையும் அர்ப்பணிப்பையும் கோரி நிற்கின்றது. கல்வியானது ஒரு வியாபாரமாக இருப்பின் அது வரி வசூல்களை அதிகரிக்கும் ஒன்றாக என்று இல்லாமல் மனிதத் திறமைகளை விரிவுப்படுத் துவதை தன்னுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்திப் பொருளாகக்கொண்டிருத்தல் வேண்டும். அது பொதுநலத்திற்காக நேர்மை, தெரிந்துக்கொள்வதில் பேராவல் மற்றும் அர்ப்பணிப்பு என்பனவற்றின் மைய விழுமியத் தொகுதிக்குள் தங்கிக்கொண்ட ஒரு தொழில் முயற்சியாகும். இந்த மைய விழுமியங்களை பலவீனப்படுத்துவதாக இருந்தால் பெருமெண்ணிக்கையான மக்கள் தங்களுடைய தனிப்பட்ட முதலீட்டின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளமையை காண்பார்கள்".

## 07) முடிவுரை:

இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வியானது ஒரு நெருக்கடியில் உள்ளது என்பது பரவலாகப் பேசப்படும் விடயம் ஒன்றாகும். ஒரு குறிப்பிட்டதுறையில் எப்பொழுது பிரச்சினைகள் அவதானிக்கப்படுகின்றதோ அப்போது நெருக்கடி என்ற சொல் ஆடம்பரமாக பயன்படுத்தப்படும் ஓர் உலகத்தில் நான் மேலே கூறிய கூற்றை பாரதூரமானதொன்றாக எடுப்பதில்லை. இங்கு பல்கலைக்கழக முறைமை பிரச்சினைகளைக் கொண்டுள்ளது என்பதிலும் சீர்திருத்தங்கள் கோரிநிற்கின்றது என்பதிலும் சந்தேகம் கிடையாது. ஏனையவை விட எமது பல்கலைக்கழகங்களின் சில பகுதிகள் இந்த நிலையில் உள்ளன. பல்கலைக்கழகச் சீர்திருத்தம் என்பது பல்கலைக்கழக வட்டத்திற்குள் போலவே அகன்ற தேசிய கருத்தாடலுக்குள்ளேயும் (discourse) பரந்தளவில் கலந்துரையாடப்பட்ட ஒரு தலைப்பு ஆகும். இந்த கலந்துரையாடல்களால் பல திட்ட முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. இந்த முன்மொழிவுகளில் சிலவற்றினை பற்றி கொள்கை வகுப்பாளர் வட்டங்களில் முக்கியமானதாக கலந்துரையாடப்பட்டுள்ளன. *1990*களின் பிற்பகுதியின் போது பல்கலைக்கழக முறைமைக்குள்ளே நான் சீர்திருத்த இயக்கத்திற்கு வழிக்காட்டினேன். பல்கலைககழக மானியங்கள் ஆணைக்குழுவின் பங்களிப்புடன் குறிப்பிட்ட செயற்பாட்டில் நான் தேவைப்படும் சீர்திருத்தங்களை அடையாளங்காணல் வேண்டும், பல்கலைக்கழகத் திற்குள்ளே மற்றும் பல்கலைக்கழகங்களுக்கிடையில் உடன்பாடுளை அடைதல் வேண்டும், அத்துடன் வெளிப்புற முகவர்களால் பயமுறுத்தி மேற்கொள்ளப்படும் திசைமாற்றல் நிகழ்ச்சி நிரலில் இருந்து வருகின்றவை அனுமதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்ற கருத்துகளின் மீது உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தேன். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பங்களிப்புடனோ அல்லது பங்களிப்பின்றியோ இவ்விடயம் சாா்ந்த பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துரையாடல்கள் பல்கலைக்கழகங்களில் நடைபெறுகின்றன என்பது உறுதி. பல்கலைக்கழக சமுதாயாத்தை சார்ந்த பல அங்கத்தவர்களுடைய அர்ப்பணிப்புடன் எமது பல்கலைக்கழகங்கள் உலகத்தரத்திற்கு உயர்த்தப்படும் ஒரு நடைமுறைச் சார்த்தியமான சீர்திருத்த நிகழ்ச்சி தோன்றுதல் என்பது உறுதி.

பல்கலைக்கழகக் கல்வியுடன் தொடர்புடையதாக நாங்கள் நெருங்கிய இணைப்புகளைக்கொண்டுள்ள நாடுகளில் சில என்றவகையில் பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடைய அனுபவங்களிடம் இருந்து நாங்கள் படிக்க வேண்டிய தெளிவான பாடங்கள் உள்ளன. இந்த நாடுகளினதும் செல்வந்த பல்கலைக்கழக பாரம்பரியங்களைக் கொண்டுள்ள ஏனைய நாடுகளினதும் அனுபவங்களானது எமக்கு அதிக நன்மைபயக்கும் உலக நடைமுறைகள் எவை என்பதை பற்றி கூறுகிறன்றவையாக உள்ளன. எவ்வாறாயினும் வெளிநாடுகளில் இருந்து வருகின்ற சீர்திருத்தங்கள் எதுவாக இருந்தாலும் அவை எமது சொந்த அனுபவங்களுடன் மிகவும் முக்கியமானதாக தேசிய ரீதியாகப் பிரயோகிக்கப்படக்கூடியதாகவும் சாத்தியமானதாகவும் உள்ள செல்வந்த நிலைகொண்ட பாடங்களுடன் மிகவும் கவனமாக இணக்கமான கலவையாக்க வேண்டும். எமது முறைமைகளுக்கு எது சிறந்தது என்பதைத் தெரிவுசெய்து கொள்ளத் தேவையானளவு முதிர்வையும் அனுபவங்களையுங் கொண்டதாக இலங்கைப் புலமைசார் சமுதயாம் உள்ளது. இதன்போது அரசு முக்கிய வகிபாகத்தைக்கொண்டதாக உள்ளது. எவ்வாறாயினும் இதன்போது அரசு முகவர்கள் புலமையாளர்களுடனும் பல்கலைக்கழக சமுதாயத்தின் ஏனையவர் களுடனும் சேர்ந்து வேலை செய்ய வெண்டும் என்பதுடன் கூடி ஆலோசனை செய்தல் என்று இல்லாமல் அவர்களின் மீது தீர்வுகளை திணிக்கலாகாது. எந்தவொரு சீர்திருத்த நிகழ்ச்சியும் வெற்றியடைவதற்கு பூர்வ உடன்பாடு உருவாக்கல் என்பது மிகவும் முக்கியமானதானதொரு விடயமாகும்.

பல்கலைக்கழக வாடிக்கையாளர்களாகக் குறிப்பிடப்படும் மாணவர்களினதும் (அவர்களுடைய பெற்றோர்களினதும்) கண்ணோட்டத்தில் பார்க்கும் போது ஒரு பல்கலைக்கழகத்தின் வகிபங்கானது காலக்கிரமத்தில் மாறியுள்ளமையை அவதானிக்க முடியும். மாணவர்களைப் பொறுத்தவரையில் மரபு ரீதியாக பார்க்கும்போது ஒரு பல்கலைக்கழகத்தின் முக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கோள்களாக கீழ்வருகின்றவை இருந்தன. 1) பிரச்சினைகளை தீர்க்கவைக்கும் திறனை வளர்ச்சியடைய செய்தல் (2) அறிவையும் புரிந்துகொள்ளும் ஆற்றலையும் விரிவடைய செய்தல் (3) ஆக்கத்திறனை வளர்த்தல் (4) விமர்சன ரீதியான சிந்தனையை வளர்த்தல் (5) உணர்வுத்திறன் வளர்த்தல் என்றவகையில் ஆகும். கூடிக்கொண்டு வருகின்ற சனத்தொகையின் இளம் சதவீதத்தை உள்வாங்கிக்கொள்வதற்கு பல்கலைக்கழகக் கல்வியை விரிவுபடுத்தலுடன் மேலே கூறப்பட்ட தொல்சீர் பல்கலைக்கழகக் கற்றல் கற்பித்தல் குறிக்கோள்கள் புறக்கணிக்கப்பட்டு ஒரு தொழிலுக்காக அல்லது ஒரு வருமான வழியிற்காக என்பதை மூலக் குறிக்கோளான முக்கியத்துவத்தை பெற்றுக்கொண்டுள்ளது. பல்கலைக்கழகத்திற்கும் வேலை உலகத்திற்கும் இடையேயான இணைப்பு இன்றைய நாட்களில் அதிகமாக வலியுறுத்தப்படுகிறது. பல்கலைக்கழகத்திற்கும் பல்தொழில்நுட்ப (polytechnic) நிறுவனத்திற்கும் இடையிலான வித்தியாசம் தெளிவற்றதாய்ப் போய்யுள்ளது. ஆயினும் ஏற்கனவே வாதிட்டது போல எனது உறுதியான கருத்தானது பல்கலைக்கழகத்தின் வகிபாகமானது தன்னுடைய மாணவர்களை வருமானம் கிடைக்கும் தொழிலுக்காகப் பயிற்றுவிபபதே ஆகும் என்பதை தாண்டிச் செல்கின்றது. பல்கலைக்கழகத் துறைக்காக சீர்திருத்தக் கட்டுகளைத் தெரிவுச்செய்துகொள்ளும் போது பல்கலைக்கழகக் கல்வியின் தொழில்வாய்ப்புக் குறிக்கோளையும் வேலையற்ற பட்டதாரிகளின் சமூக பொருளாதார நிலைமைகளின் முக்கியத்துவத்தையும் கருத்தில்கொள்ளல் வேண்டும்.

இந்த இடத்தில் இலங்கையின் பிரச்சினையானது மேலோட்டமாக தெரியும்படி நேரான வழியில் செல்கின்றதொன்றாக இல்லை. எமது பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் பெரும் எண்ணிக்கையான பட்டதாரிகள் பல மாதங்கள் சென்றும் சிலவேளை பல வருடங்கள் சென்ற பின்பும் கூட பொருத்தமான தொழிலைத் தேடிக்கொள்வதில் தோல்வியடைகிறார்கள். இதனை விமர்சகர்கள் "வறிய நிலைப் பல்கலைக்கழகக்கல்வி" என்று தவறான பொருள்விளக்கத்துடன் அணுகி ஒரு நேர்காரண காரிய அமைய உறவுடன் (straightforward causal relationship) பட்டதாரிகளின் தொழில் இல்லாமையிற்கான காரணம் கற்பிக்கும் போக்கை கொண்டுள்ளார்கள். இந்த இரு சார்புகளை இணைப்பதில் தவறான தருக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது என்பதையும் அத்துடன் இந்த ஊகத்தின் போது வலுவான தொடர்புடைய பல காரணிகள் அலட்சியப்படுத்தப் பட்டுள்ளன என்பதையும் மனதில்கொள்ளல் வேண்டும். உண்மையாகவே நான் இந்தக் கூற்றுகளைப்பற்றி என்னுடைய உரையின் போது கலந்துரையாடவில்லை. இதனை குறிப்பிடுவதில் என்னுடைய நோக்கமானது உரையின் இறுதியில் பொறுத்தமான அவைகளில் இவை பற்றிய விரிவான கலந்துரையாடல் அவசியம் இடம்பெற வேண்டும் என்பதை வலியுறுத்துவதே ஆகும். பட்டதாரிகளுக்கு தொழில் இல்லாமை என்பது பல்கலைக் கழகங்களில் வறிய தரத்திலான கல்வியின் விளைவுதான் என்ற கூற்றுகளால் முழுமையாகவோ அல்லது ஆதிக்க மிகுதியுடனானதாகவோ வழிகாட்டுவதாக பல்கலைக்கழக சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் அமையக்கூடாது என்பதை வலியுறுத்தத்தான் நான் இதனை இங்கு குறிப்பிடுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசுப் பல்கலைக்கழக முறைமை முகங்கொடுத்துள்ள சிக்கல்களும் சவால்களும்

"சாதாரண உற்பத்தித் துறைகளில் இலாப சதவீதம் வேகமாக வீழ்ச்சியடைந்து கொண்டுள்ளமையானது இன்று உலகமய மட்டத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட முதலாளித்துவ முறைமை முகங்கொடுத்துள்ள ஒரு தீர்க்கமான பிரச்சினையாக குறிப்பிடலாம். உழைப்பின் விலையானது ஒப்பீட்டளவில் ஏற்றமடைந்துள்ளமையே அதற்கு பிரதான காரணமாக உள்ளது. எனவே குறைந்த உழைப்பை வழங்குவதன் வழியாக அதிக இலாபத்தை சம்பாதித்துக்கொள்ளக்கூடியதான கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசியமான பொதுசன சேவைகளை விலைப்பொருட்களாக்க வேண்டிய தேவை அதிகமாகத் தோன்றியுள்ளது.

கல்வி மாத்திரமல்ல சுகாதாரம் போன்ற துறைகளையும் விலைப்பொருள்மயமாக்கப்படுதலில் இருந்து விடுவித்துக்கொண்டு பொதுசன தேவைகளாக மேற்கொண்டு செல்ல வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தல், முன்னிலைப்படுத்தல் என்பது முக்கியமானதாக உள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் மொத்த தேசிய உற்பத்தியில் இருந்து 06% வீதம் அரசு செலவீனங்களாக கல்விக்காக ஒதுக்க வேண்டும் என்ற சுலோகத்தை முன்வைக்க காரணமும் இதுவே ஆகும்".

**கலாநிதி நிர்மால் இரஞ்சித் தேவசிறி**

FUTA

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம்

ISBN 978-9554751002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org